பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

தேங்காய் உரித்த மட்டை தேவை
[பொச்சு மட்டை]
ஒரு மட்டை ரூபா 7.00 க்கு
கொள்வனவு செய்யப்படும்.
முகாமையாளர்:
K.V. Coco Feed (Pvt) Ltd
வேம்பிராய், மீசாலை.
தொடர்பு: மு.ப 9.00 மணி - பி.ப 4.00 மணிவரை
077 622 3162

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 93

வியாழக்கிழமை
27 பெப்ரவரி 2025

மாசி 15 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

வன்முறைகளை விசாரிக்கும் வகையில்

# நல்லிணக்க ஆணைக்குழுவுக்கு கூடுதலான அதிகாரங்கள்!



## வெளிவிவகார அமைச்சர் விஜித ஜெனிவாவில் அறிவிப்பு

**ஜெனிவா, பெப்ரவரி 27**

இலங்கையில் இடம்பெற்ற வன்முறைகள் தொடர்பில் விசாரிக்கும் வகையில் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவுக்குக் கூடுதலான அதிகாரங்கள் வழங்கப்படும் என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார். 11

வற்றாப்பளையில்

## சிறுவனொருவன் சடலமாக மீட்பு!

முல்லைத்தீவு, பெப். 27
முல்லைத்தீவு வற்றாப்பளைப் பகுதியில் பதினாறு வயதுச் சிறுவனொருவன் நீர்நிலையில் இருந்து 10

## வடமாகாணத்தில் மழை தொடரும்!

யாழ்ப்பாணம், பெப். 27
வடமாகாணத்தில் தற்போது நிலவும் மழையுடனான காலநிலை எதிர்வரும் 3 ஆம் திகதிவரை தொடரும் 10

## மான் அணி தனி வழி?

யாழ்., பெப். 27
உள்ளூராட்சித் தேர்தலின்போது தமிழ் மக்கள் கூட்டணியினர், சங்குக் கூட்டணியில் இணையாமல் 10

சங்குச் சின்னத்தில்

## ஈ.பி.டி.பி.யும் இணையலாம்

### சுரேஷ் அழைப்பு

யாழ்ப்பாணம், பெப். 27
சங்குச் சின்னத்தில் பரந்துபட்ட கூட்டணியை அமைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. இதன்படி, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி 11

## ஜனாதிபதியின் பாதுகாப்பில் எந்தக் குறைபாடும் இல்லை

### அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவிப்பு

கொழும்பு, பெப். 27
ஜனாதிபதியின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அது தொடர்பில் வீணாக அச்சம்கொள்ள வேண்டியதில்லை என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

பாதாளக் குழுக்களால் ஜனாதிபதியின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்று புலனாய்வுப் பிரிவு தகவல் வழங்கியுள்ளது என்று செய்திகள் வெளியாகி இருந்தன. அது தொடர்பில் நேற்றுக் கருத்துத் தெரிவிக்கும் 11

இந்திய மீனவர்களின்

## அத்துமீறிய மீன்பிடிக்கு எதிராக இன்று போர்!

யாழ்ப்பாணம், பெப். 27
இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துமாறு வலியுறுத்தி 11

பட்ஜெட்டை ஆதரித்த

## செல்வம் எம்.பி.யின் முடிவு கூட்டணியின் முடிவு அல்ல

### நழுவுகின்றது சங்குக்கூட்டணி

யாழ்ப்பாணம், பெப். 27
பட்ஜெட்டின் இரண்டாவது வாசிப்புக்கு நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் எம்.பி. வழங்கிய ஆதரவு அவருடைய தனிப் 11

நீதிமன்றத்துக்குள்

## புலிகளின் காலத்தில்கூட துப்பாக்கிச்சூடு இல்லை!

கொழும்பு, பெப். 27
புலிகள் இருந்த காலத்தில்கூட நீதிமன்றத்துக்குள் வைத்து துப்பாக்கிச்சூடு நடத்தப்படவில்லை. தற்போது அவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுகின்றமை பாதுகாப்பு அச்சுறுத்தலின் எதிரொலியே என்று ராவணா பலய 11

## வடக்கின் பெரும் போர் பொன் அணிகளின் போர்

### மாபெரும் கிரிக்கெட் போட்டிகள் மழையால் பிற்போடப்பட்டன!

யாழ்ப்பாணம், பெப். 27
வடக்கின் பெரும்போர் மற்றும் பொன் அணிகளின் போர் என வர்ணிக்கப்படும் கிரிக்கெட் ஆட்டங்கள், காலநிலைகாரணமாகபிற்போடப்பட்டுள்ளன. 10



முச்சந்தி முராரி

'தமிழருக்கு அதிகாரம் தாருங்கோ எண்டா இவை ஆணைக்குழுவுக்கு அதிகாரம் குடுக்கினமாம்'

இம்முறை அமைதியாக

## வெடுக்குநாறிமலையில் சிவராத்திரி வழிபாடு!

வவுனியா, பெப். 27
நெடுங்கேணி வெடுக்குநாறிமலையில் இம்முறை சிவராத்திரிதின விசேட வழிபாடுகள் எந்தப் பதற்றமும் இல்லாமல் மிகவும் அமைதியாக இடம்பெற்றன.

மலை உச்சியில் அமைந்துள்ள ஆதி லிங்கேஸ்வரருக்கு நேற்று பிற்பகல் விசேட அபிசேகபூஜைகள் இடம்பெற்றன. ஏனைய பரிவார தெய்வங்களுக்கும் விசேட ஆராதனைகள் 11

யாழ். போதனா மருத்துவமனையில்

## நிர்வாகத்துக்கு எதிராக இன்றுமுதல் போராட்டம்!

யாழ்ப்பாணம், பெப். 27
யாழ்ப்பாணம் போதனா மருத்துவனையின் நிர்வாகத்துக்கு எதிராக, அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர் இன்றுமுதல் தொழிற்சங்க நடவடிக்கையை 11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிசெத**

| | |
|---|---|
| திகதி | 26.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4001 |
| ஆங்கில எழுத்து | Z |
| வெற்றி இலக்கங்கள் | 20 49 51 52 |
| விசேட எழுத்து | Z |

**ஹந்தஹண ராசி சுப பலன்**

| | |
|---|---|
| திகதி | 26.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1068 |
| வெற்றி இலக்கினம் | கும்பம் |
| வெற்றி இலக்கங்கள் | 15 29 48 50 |

**NLB ஜய**

| | |
|---|---|
| திகதி | 26.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 027 |
| ஆங்கில எழுத்து | K |
| வெற்றி இலக்கங்கள் | 5 4 9 3 |

**மெகா பவர்**

| | |
|---|---|
| திகதி | 26.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2107 |
| ஆங்கில எழுத்து | C |
| சுப்பர் இலக்கம் | 13 |
| வெற்றி இலக்கங்கள் | 22 28 39 53 |

**மஹஜன சம்பத**

| | |
|---|---|
| திகதி | 26.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5759 |
| ஆங்கில எழுத்து | O |
| வெற்றி இலக்கங்கள் | 2 8 4 5 5 1 |

**தன நிதானய**


| | |
|---|---|
| திகதி | 26.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1789 |
| ஆங்கில எழுத்து | V |
| வெற்றி இலக்கங்கள் | 53 78 80 81 |
| விசேட எழுத்து | V |

**அத சம்பத**

| | |
|---|---|
| திகதி | 26.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 334 |
| ஆங்கில எழுத்து | O |
| வெற்றி இலக்கங்கள் | 4 5 5 1 |

# பழிவாங்கலைக் கைவிட்டு குற்றவாளிகளைக் கண்டறிக

## நாமல் தெரிவிப்பு



கொழும்பு, பெப். 27

**எல்லாப் பழிகளையும் ராஜபக்சக்கள்மீது திணிக்கும் அரசியல் பழிவாங்கலைக் கைவிட்டு, உண்மையான குற்றவாளிகளை அரசாங்கம் கண்டுபிடிக்கவேண்டும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.**

எயார்பஸ் விமான ஒப்பந்த கொடுக்கல்- வாங்கல் தொடர்பில் வாக்குமூலம் பெறுவதற்கு நாமல் ராஜபக்ச குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்கு நேற்று அழைக்கப்பட்டிருந்தார்.

குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்குச் சென்றிருந்த நாமல் ராஜபக்சவிடம் சுமார் 5 மணிநேரம் வாக்குமூலம் பெறப்பட்டது. அதன்பின்னர் குற்றப்புலனாய்வுத் திணைக்கள வளாகத்தில் வைத்து ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

விடுமுறை நாளில்கூட எம்மை விசாரணைக்கு அழைக்கின்றனர். நாமும் அதற்கு ஒத்துழைப்பு வழங்குகின்றோம். எம்மை விசாரிப்பதற்கு காட்டும் ஆர்வத்தை மக்களுக்கு வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்றுவதில் தற்போதைய அரசாங்கம் காண்பிக்கவேண்டும்.

நாட்டில் எதையாவது செய்துவிட்டு பழியை ராஜபக்சக்கள்மீது போட்டால், அந்நபர் தப்பிக்கக்கூடிய நிலை தற்போது காணப்படுகின்றது.

எனவே, அரசியல் பழிவாங்கலை ஒருபுறம் வைத்துவிட்டு உண்மையான குற்றவாளிகளை கண்டுபிடிக்குமாறு அரசாங்கத்திடம் கோருகின்றேன் - என்றார். (ச-44)

**சுபிரி தன சம்பத**

| | |
|---|---|
| திகதி | 26.02.2025 |
| தினம் | புதன்கிழமை |
| வெற்றி வாரம் | 0467 |
| ஆங்கில எழுத்து | K |
| வெற்றி இலக்கம் | 3 6 9 9 0 7 |

**Super Ball DLB**

| | |
|---|---|
| திகதி | 26.02.2025 |
| தினம் | புதன்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 2733 |
| ஆங்கில எழுத்து | H |
| வெற்றி இலக்கம் | 12 13 57 67 |

**சனிதா DLB**

| | |
|---|---|
| திகதி | 26.02.2025 |
| தினம் | புதன்கிழமை |
| ஆங்கில எழுத்து | E |
| வெற்றி இலக்கம் | 05 14 20 28 |
| வெற்றி வாரம் | 4894 |

**லக்ன ராசி DLB**

| | |
|---|---|
| திகதி | 26.02.2025 |
| தினம் | புதன்கிழமை |
| மிதுனம் | |
| வெற்றி இலக்கம் | 02 18 26 37 |
| சீட்டிழுப்பு வாரம் | 4445 |

**KAPRUKA DLB**

| | |
|---|---|
| திகதி | 26.02.2025 |
| தினம் | புதன்கிழமை |
| ஆங்கில எழுத்து | L |
| சுப்பர் இலக்கம் | 02 |
| வெற்றி இலக்கம் | 01 21 66 68 |
| வெற்றி வாரம் | 1909 |

**அத கோடிபதி DLB**

| | |
|---|---|
| திகதி | 26.02.2025 |
| தினம் | புதன்கிழமை |
| ஆங்கில எழுத்து | C |
| வெற்றி இலக்கம் | 12 26 31 74 |
| வெற்றி வாரம் | 2559 |

**JAYODA DLB**

| | |
|---|---|
| திகதி | 26.02.2025 |
| தினம் | புதன்கிழமை |
| ஆங்கில எழுத்து | R |
| வெற்றி இலக்கம் | 04 29 37 57 |
| வெற்றி வாரம் | 2107 |

# செவ்வந்தி போன்ற பெண் கைது

கொழும்பு, பெப்.27

கணேமுல்ல சஞ்சீவ்வின் கொலை சம்பவத்தின் பிரதான சந்தேகநபராகக் கருதப்படும் இஷாரா செவ்வந்தி என்பவரின் உருவத்துக்கு இணையான யுவதி ஒருவர் மத்துகம பகுதியில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த யுவதியின் கையடக்கத் தொலைப்பேசியைப் பரிசோதனை செய்வதற்காக நீதிமன்றத்திடம் உத்தரவைப் பெற்று அடுத்தகட்டவிசாரணைகளை முன்னெடுக்கவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-இ)

### பொலிஸாருக்கு 'டிமிக்கி' விடும்

# செவ்வந்தியைக் கண்டுபிடிக்க ஒரு மில்லியன் சன்மானம்

கொழும்பு, பெப்.27


பாதாள உலகக் குற்றவாளியான கனேமுல்ல சஞ்சீவவை சுட்டுக் கொலைசெய்வதற்கு உதவிய இஷாரா செவ்வந்தியைக் கைது செய்வதற்கு வழிவகுக்கும் தகவல்களை வழங்குபவர்களுக்கு ஒரு மில்லியன் ரூபா ரொக்கப் பரிசு வழங்கப்படும் என பதில் பொலிஸ்மா அதிபர் புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார்.

சந்தேகநபர் நாட்டைவிட்டுத் தப்பிச் செல்வதற்கான எந்த வாய்ப்பும் இல்லை. அவர் தப்பிச் செல்வதைத் தடுக்க பொலிஸார் அதியுச்ச பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுத்துள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அதேவேளை கடந்த ஒருவாரகாலமாக சுமார் பத்துக்கும் மேற்பட்ட பொலிஸ் குழுக்கள் செவ்வந்தியைத் தேடிவருகின்றன. எனினும் இதுவரை பொலிஸாரின் கண்ணில்படாமல் அவர் தப்பிவருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# பாதாளக்குழுக்களே மோதல் எம்.பி.க்கள் நடுங்குவது ஏன்?

## லக்ஷ்மன் நிபுண கேள்வி



கொழும்பு, பெப். 27

பாதாள உலகக் குழுக்கள் தங்களுக்குள் மோதிக் கொள்வதைப்பார்த்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏன் பயப்படுகிறார்கள்? என ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் லக் ஷ்மன் நிபுண கேள்வி எழுப்பியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாதாள உலகக் குழுக்கள் தங்களுக்குள் மோதிக்கொள்வதைப் பார்த்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் பயப்படுகிறார்கள் என்றால் அவர்களுக்கு பாதாள உலகக் குழுக்களுடன் தொடர்பு இருக்கிறது என்றுதானே அர்த்தம். நான் பிலியந்தலைச் சந்தியால் தனியே நடந்துபோகிறேன். அப்படியானால் எனக்கும் பாதுகாப்பு வழங்கப்படவேண்டும். எனக்கு பாதாள உலகக் குழுக்களுடன் எதுவித தொடர்புமில்லை. அரசியல்வாதிகள் பயப்படுவது பாதாள உலகத்துடனான தொடர்பையே வெளிப்படுத்துகிறது -என்றார். (ச-25,6)

# அரச சார்பற்ற நிறுவனங்களை கட்டுப்படுத்துவதை நிறுத்துக!

## இலங்கையிடம் கோருகின்றது ஐ.நா.

கொழும்பு, பெப்.27

அரச சார்பற்ற நிறுவனங்கள்மீது இலங்கை அரசாங்கம் விதித்துள்ள கட்டுப்பாடுகளைத் தளர்த்தவேண்டும் என்று ஐ.நா. கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கையில் பாலியல் ரீதியான வன்முறைகள் அதிகரிதத்துள்ளன. ஐந்தில் ஒரு பெண் பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவேண்டும். மகளிர் அமைப்புக்கள் மீதான கட்டுப்பாடுகள் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உதவுவதைத் தடுக்கும்.

மகளிர் அமைப்புகள், மனித உரிமை அமைப்புகள் மீதான கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட வேண்டும். பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெறப்பட வேண்டும், கட்டாயப் பதிவுகள் மேற்கொள்ளப்படவேண்டும் போன்ற கெடுபிடிகளின்றி சுயாதீனமாகவும், வெளிப்படைத்தன்மையுடனும் அரச சார்பற்ற நிறுவனங்கள் செயற்படுவதற்கு அனுமதிக்கப்படவேண்டும் என்று ஐ.நா. கோரிக்கை விடுத்துள்ளது. (ஏ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதாளக்குழுக்களின்பின்னணியில் அரசியல்வாதிகள்?

## விசாரணை வேட்டையில் அரசு

**கொழும்பு, பெப். 27**
**பாதாளக்குழுக்களின் பின்னணியிலுள்ள குழு தொடர்பில் புலனாய்வுப் பிரிவு விசாரணை வேட்டையில் இறங்கியுள்ளது. அரசியல்வாதிகளின் தொடர்பு பற்றியும் ஆராயப்படுகின்றது என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால நேற்று தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,
தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அரசியல் பழிவாங்கலில் ஈடுபடவில்லை. அரசியல் அழுத்தங்களின்பேரில் விசாரணைகள் நடத்தப்படுவதும் இல்லை. பாதாளக்குழுக்களின் செயற்பாடுகள் திடீரென ஒரேதடவையில் அதிகரித்த நிலையில் அதன் பின்னணியில் குழுவொன்று உள்ளதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. இது தொடர்பில் புலனாய்வுப் பிரிவு நடவடிக்கையில் இறங்கியுள்ளது.
அதேபோல எமக்கு சிற்சில சமிக்ஞைகள் கிடைக்கின்றன. எனவே, முறையான விசாரணைகளை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.
அரசியல்வாதிகள் இதனுடன் தொடர்புபட்டிருந்தால் விசாரணை நடத்தவும் நடவடிக்கை எடுக்கவும் நாம் தயங்கப்போவதில்லை -என்றார். (ச-44)

# தங்கச்சங்கிலி திருட்டு

யாழ்ப்பாணம், பெப். 27
நாவற்குழி திருவாசக அரண்மனையில் பெண் ஒருவரின் தங்கச்சங்கிலி, கைத்தொலைபேசி மற்றும் பணம் என்பன நேற்று திருடப்பட்டுள்ளதாக சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
சிவராத்திரிப் பூஜை வழிபாட்டில் ஈடுபட்டுக்கொண்டிருந்தவேளையிலேயே இந்தத் திருட்டு இடம் பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் சாவகச்சேரிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-28)

## ரூ.12 மில்லியன் பெறுமதியான

# 'குஷ்' போதைப்பொருளுடன் பெண்ணொருவர் கைது

கொழும்பு, பெப். 27
சுமார் 12 மில்லியன் ரூபா மதிப்புள்ள ஒரு கிலோ 200 கிராம் குஷ் போதைப்பொருளுடன் பெண்ணொருவர் நேற்று அதிகாலை கட்டுநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டுப்பிரிவின் அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டார். குறித்த பெண் தாய்லாந்தின் பெங்கொங்கிலிருந்து ஹொங்கொங் வழியாக இலங்கைக்குப் பிரவேசித்துள்ளார். இந்த குஷ் போதைப்பொருளைச் சந்தேகநபர் தனது பயணப்பையில் உணவுப்பொதியொன்றில் மறைத்துவைத்து எடுத்துவந்துள்ளார். சந்தேகநபர், மீட்கப்பட்ட போதைப்பொருளுடன் மேலதிக விசாரணைகளுக்காகப் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பணியகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ச-இ)

# மினுவாங்கொடை துப்பாக்கிச்சூடு

கொழும்பு, பெப்.27
கம்பஹா, மினுவாங்கொடை பத்தன்டுவனப் பிரதேசத்தில் துப்பாக்கிச்சூடு நேற்று இடம்பெற்றுள்ளது. துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயமடைந்துள்ள நிலையில் சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். காயமடைந்த நபர் 36 வயதுடையவராவார்.
மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத இருவரே தாக்குதலை மேற்கொண்டு தப்பிச்சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. இதுதொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ச-இ)



# சூதாட்ட விளையாட்டுகள்; ஒழுங்குபடுத்த அதிகாரசபை

கொழும்பு, பெப். 27
சூதாட்ட விளையாட்டுகளை ஒழுங்குபடுத்துவதற்கான அதிகாரசபையை நிறுவுவதற்கான யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.
இலங்கையில் சீட்டாடுதல் , விளையாட்டு நிறுவனங்களைத் தரநிர்ணயப்படுத்தல், சமூகப் பாதிப்புகளைக் குறைத்தல், சுற்றுலாத்துறையை மேம்படுத்தல் மற்றும் பொருளாதார அபிவிருத்திக்கு விரிவான விடயதானத்துடன் கூடிய சுயாதீன ஒழுங்குபடுத்தல் நிறுவனமாக, சூதாட்ட விளையாட்டு ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையை நிறுவுவதற்கே அமைச்சரவை அங்கீகரித்துள்ளது. நிதி,திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக ஜனாதிபதி இந்த யோசனையைச் சமர்ப்பித்தார். (ச-இ)

## பரு. கடற்பரப்பில்

# கடற்படை சூட்டுப்பயிற்சி; மீனவர்களுக்கு அறிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.27
பருத்தித்துறைக் கடற்பரப்பில் கடற்படையினரின் துப்பாக்கிச்சூட்டுப்பயிற்சி எதிர்வரும் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணிவரை இடம்பெறவுள்ளது.
மீனவர்கள் இந்தக் காலப்பகுதியில் குறித்த கடற்பரப்புக்குள் பிரவேசிப்பதைத் தவிர்க்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.
இந்த அறிவுறுத்தல் யாழ். கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள உதவிப் பணிப்பாளரால் அனைத்துக் கடற்றொழில் சங்கங்களுக்கும் விடுக்கப்பட்டுள்ளது. (ச-27)




**நா**டு முழுக்க இப்ப ஒரே துவக்குச்சூடு எண்டதால, காட்டுப்பக்கமாக பட்சி பறந்துபோய்க்கொண்டிருந்தது. அப்படிப் பார்த்தால் ஒரு வெட்டையில கனக்க மிருகங்கள் ஒண்டா நிண்டு மீட்டிங் வைச்சுக்கொண்டு நிண்டிச்சினம். சரி சும்மா பறக்கிறதைவிட அவை கதைக்கிறதைக் கேட்டாலும் பொழுது போகுமெண்டு பட்சியும் அதுக்குள்ள போய் குந்தியிருந்திட்டுது. குரங்குகளும், நாய்களும்தான் அந்த மீட்டிங்கில கடும் அமளி.

'நாங்கள் முடிவெடுத்திட்டம். இந்தக் கேவலம் கெட்ட நாட்டில இனியும் இருக்கேலாது. கறண்ட் கட்டாப் போனாலும் எங்களிலதான் பழி. தேங்காய் விலை ஏறினாலும் எங்களிலதான் பழி. நாய்க்கு எங்க கல்லெறிஞ்சாலும் காலைத் தூக்கிறமாதிரி எல்லாத்துக்கும் எங்களில பழி போடுற நாட்டில என்னெண்டு நிம்மதியா இருக்கிறது?' எண்டு குரங்குகள் புலம்பிச்சினம். 'இஞ்ச... இப்ப எதுக்கு எங்களை இதுக்க இழுக்கிறீங்கள்? நாங்கள் உவங்களில கடுப்பிலதான் இருக்கிறம். அரிசித் தட்டுப்பாட்டுக்குக் காரணம் அதைக் கோழியளுக்குப் போடுறதுதான் எண்டு முதல் சொல்லிப்போட்டு,இப்ப என்னடாவெண்டால் நாங்கள் சாப்பாட்டு ராமராம். அதால நாங்கள் மனிசரைவிடக் கூட தின்றதால தான் இஞ்ச அரிசிக்குத் தட்டுப்பாடாம் எண்டு பார்லிமெண்டிலையே சொல்லுகினம். உங்களுக்கு அடுத்ததா எங்களைத்தான் குறிவைக்கினம் குரங்காரே' எண்டு நாய்களும் தங்கட மனக்குமுறலை கொட்டிச்சினம். 'உண்மைதான். மடையன் மாதிரிக் கதைக்கிற அதாவுல்லா கூட கோழிக்கு அரிசி போடவேண்டாமெண்டால் அப்ப என்ன ரிப்பி ரிப்பியோ அதுகளுக்குப் போடோணுமெண்டு வெடில் கதையெல்லாம் கதைக்கிற அளவுக்கு எங்கட நிலைமையும் கேவலமாப் போட்டுது' என்று கோழிகளும் ஒருபக்கம் கொக்கரித்தன.

'நன்றிகெட்ட இந்தநாட்டு மனிசரோ இருக்கிறதைவிட வேற எங்கையும் அமேசன், ஆபிரிக்கக் காடுகளுக்க போனால் அங்க அசலம் அடிச்சுப்போட்டு நிம்மதியா இருக்கலாம் எண்டு முடிவெடுத்திருக்கிறம். உங்கட முடிவு என்ன? எண்டு நாயளின்ர தலைவர் குரங்குத் தலைவரைப் பார்த்துக் கேட்டார். 'நாங்களும் அப்பிடித்தான் டிசைட் பண்ணியிருக்கிறம். நல்லகாலம் உப்பு, புளி தட்டுப்பாட் டுக்கும் நாங்கள் காரணமெண்டு இன்னும் உவங்கள் சொல்லேலை. அதுக்கு முதல் வெளியால போனால்தான் நல்லது. இல்லாட்டி நாங்கள் ஏதோ கள்ளர் எண்டு எங்கட அடுத்த தலைமுறை பிழையா நினைச்சிடும்' குரங்குத்தலைவரும் தன்ர முடிவிலை உறுதியா நிண்டார். கோழியளும் அதேமுடிவுதான். கூட்டத்தில இருந்து யானையாரும் பெரிய வண்டியைத் தூக்கிக்கொண்டு ஆடி அசைஞ்சு எழும்பினார். 'உங்களுக்காவது பழி சுமத்திறதோட விட்டிட்டாங்கள். எங்களை ஒவ்வொருநாளும் தந்தத்துக்காக சுட்டுச் சாக்கொல்லுறாங்கள். இல்லாட்டி கம்பியில கரண்ட் ஏத்தி, ரெயினால அடிச்சு எண்டு சாக்கொல்லுறாங்கள். நாங்களும் உங்களோட வாறம்' இப்பிடியே கிட்டத்தட்ட எல்லா மிருகங்களும் நாட்டைவிட்டு வெளிக்கிட ரெடி. 'நாட்டை விட்டுப் போறதெண்டால் அதுக்குப் பாஸ்போட் வேணுமே? இப்ப மனிசருக்கே இஞ்ச பாஸ்போட் எடுக்கிறது பெரும் கஷ்டமாக் கிடக்குது.உதுக்குள்ள எங்களுக்கு எப்பிடி எடுக்கிறது?' எண்டு குரங்குத்தலைவர் தன்ர டவுட்டைக் கேட்டார்.

'எல்லாரும் வெளிக்கிட்டு பாஸ்போட் ஒப்பீஸுக்கு முன்னால நிப்பம். மனிசர் எங்கட லைனில நிக்க வந்தால் கடிச்சு, குலைச்சு கலைப்பம். அப்ப அவை எங்களுக்கு பாஸ்போட் தரத்தானே வேணும்' இது நாய்த்தலைவரின்ர ஐடியா. 'எல்லாம் சரிதான். ஆனால் பிறகு பாஸ்போட் பிரச்சினைக்கும் பழியை எங்கள் எல்லாரிலையும்தான் உந்த அரசாங்கம் போடும். அதுக்கு ஓகேயோ?' எண்டு பட்சி சொல்லிச்சுது. அப்பதான் எல்லாருக்கும் அப்பிடி ஒரு சிக்கல் இருக்கெண்ட விசயம் உறைச்சுது. 'அப்ப உந்தக் கோதாரி விழுந்த பாஸ்போட் பிரச்சினை தீரும்வரைக்கும் காட்டுக்கையே இருப்பம். அதுக்குள்ள என்னென்ன பழி விழுந்தாலும் எங்கட விதி எண்டிட்டு இருப்பம்' எண்டு யானை பெருமூச்சோட சொல்ல, மீட்டிங் முடிஞ்சு எல்லாரும் கவலையோட வெளிக்கிட்டினம். 'பாவம் மிருகங்கள் கூட நிம்மதியா வாழ ஏலாத நாடாப் போட்டுதே' எண்டு சொல்லிக்கொண்டு பட்சியும் பறக்கத்தொடங்கிட்டுது.

padsi@uthayan.com -பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** அனுகூலமான நாள். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். திடீர் செலவுகள் ஏற்பட்டாலும், . தேவையான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். வாழ்க்கைத்துணை வழியில் மகிழ்ச்சி தரும் செய்தி வந்து சேரும்.

**இடபம்:** உற்சாகமான நாளாக அமையும். எதிர் பாராத பொருள்வரவுக்கு வாய்ப்பு உண்டு. அர சாங்கக் காரியங்கள் சற்றுத் தாமதமாகத்தான் முடி யும். புதிய முயற்சிகளை மேற்கொள்ளவேண்டாம். காரியம் நல்லபடி முடியும்.

**மிதுனம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கும் யோகம் உண்டாகும். சகோதர வகையில் செலவுகள் ஏற்படக்கூடும் என்றா லும், அதனால் மகிழ்ச்சியே ஏற்படும்.

**கடகம்:** மகிழ்ச்சியான நாள். தேவையான பணம் கையில் இருக்கும். இளைய சகோதரர் கேட்கும் உதவியைச் செய்வீர்கள். தந்தை வழி யில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வாழ்க்கைத் துணையால் மகிழ்ச்சி உண்டாகும்.

**சிம்மம்:** மனதில் இனம் தெரியாத உற்சாகம் பெருக்கெடுக்கும். ஆனால், புதிய முயற்சி எதையும் இன்று தொடங்கவேண்டாம். திடீர் செலவுகளால் கையிருப்புக் கரைவதுடன் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலையும் ஏற்படும்.

**கன்னி:** காரிய அனுகூலம் உண்டாகும். தந்தை வழி உறவுகளால் பணவரவுக்கு வாய்ப்பு ஏற்படும். முக்கிய முடிவுகளை பிற்பகலுக்கு மேல் மேற் கொள்வது சாதகமாக முடியும். எதிர்பார்த்த நல்ல செய்தி வந்து சேரும்.

**துலாம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். உங்கள் முயற்சிகளுக்கு சகோத ரர்கள் ஒத்துழைப்புத் தருவார்கள். பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். உற்சாகமான சூழ்நிலையே காணப்படும்.

**விருச்சிகம்:** வீண் அலைச்சலைத் தவிர்க்கவும். மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும்போது கவனமாக இருக்கவும். காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது.

**தனுசு:** புதிய முயற்சி எதுவும் இன்றைக்கு வேண்டாம். வெளியூர்ப் பயணத்தைத் தவிர்க்க வும். மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்ப டக்கூடும். பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். தாமதம் ஏற்படும்.

**மகரம்:** எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்புகள் ஏற்படும். சிலருக்குப் பணியின் காரணமாக பயணம் மேற்கொள்ள நேரிடும். மாலையில் உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி ஏற்படும்.

**கும்பம்:** அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். தந்தை வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதரர்களுக்காகச் செலவு செய்யவேண்டி வரும். சிலருக்கு புதிய ஆடை ஆபரணங்களின் [illegible] உண்டாகும்.

**மீனம்:** எதிர்பார்த்த பணம் கைக்குவரும். பிள்ளைகள் வழியில் எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். வெளியிடங்களில் சாப்பிடுவதை தவிர்ப்பது நல்லது. சங்கடங்களைச் சமா ளிக்கவேண்டிவரும்.

### யாழ். பல்கலையில்

# தமிழியல் ஆய்வு மாநாடு; ஆய்வுக்கட்டுரை கோரல்

யாழ்ப்பாணம், பெப். 27

கந்தையா கார்த்திகேசன் அறக்கொடை நிதியத்தின் அனுசரணையில், யாழ். பல்கலைக்கழக தமிழ்த்து றையினால் "தமிழ்மொழி, இலக்கியச் செழுமையில் ஆழ்வார் பாசுரங்கள்" எனும் தொனிப்பொருளிலான 6 ஆவது அனைத்துலக தமிழியல் ஆய்வு மாநாடு நடத்தப்படவுள்ளது. அதற்கான ஆய்வுக்கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து கோரப்பட்டுள்ளன.

கட்டுரைகள் சொந்தமுயற்சியிலானதும் வேறெங்கும் பிரசுரிக்கப்படாததுமாக இருத்தல் வேண்டும். கட்டு ரைகள் தமிழ் மொழியிலும் கணினி அச்சில் பாமினி எழுத்துருவிலும் அமைந்திருத்தல் வேண்டும்.

ஆய்வுத்தலைப்பு மற்றும் ஆய்வுச் சுருக்கத்தினை எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் பேராசிரியர் கி.விசாகரூபன், சிரேஷ்ட பேராசிரியர் மற்றும் தலை வர் கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை எனும் முகவரிக்கோ அல்லது ict2023 tamil@gmail.com எனும் மின்னஞ்சல் ஊடாகவோ அனுப்பிவைக்கலாம். தலைப்புத் தொடர்பான ஒப்பு தல் கிடைத்தபின்னர் எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் முழுமையான கட்டுரையை அனுப்பவேண் டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25)

## மருத்துவர் ந.ஜெயந்திரனுக்கு 'அன்பே சிவம்' விருது

யாழ்ப்பாணம், பெப். 27

மருத்துவ நிபுணர் ந.ஜெயந்தி ரனுக்கு 'அன்பே சிவம்' விருது வழங்கப்படவுள்ளதாக அகில இலங்கை சைவ மகாசபை தெரி வித்துள்ளது.



திருக்கேதீச்சரத்தில் சிவனருள் இல்லத்தை நிறுவி பல நூறு குழந்தைகளுக்கு கல்வியும் உணவும் உறையுளும் அளித்த துடன் வடக்கு- கிழக்கைத் தாண்டி மலையகத்திலும் மனிதநேயப் பணிகளையாற்றிய ந.ஜெயந்தி ரனுக்கு இந்த விருதை வழங்குவ தில் உவகையடைவதாகவும் அகில இலங்கை சைவ மகாசபை தெரிவித்துள்ளது. (ச-25,125)

## ஸ்ரீஞானவைரவர் அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம், பெப். 27

யாழ். வண்ணை நல்லதண்ணீர்க் கிணற்றடி ஸ்ரீஞான வைரவர் ஆலய அலங்கார உற்சவம் இன்று வியா ழக்கிழமை ஆரம்பமாகி 15 தினங் கள் நடைபெறவுள்ளது.

தினமும் மாலை 6 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து சுவாமி உள்வீதி உலாவருதல் இடம் பெறும்.

இறுதிநாளான்று பகல் சங்காபிஷே கம், சொற்பொழிவு, அன்னதானம் ஆகியன இடம்பெறுவதுடன் மாலை இலக்கண சுவாமிகள் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலைநி கழ்வுகள், திருவூஞ்சல் ஆகியனவும் பெறும் என்று ஆலய தர்மகர்த்தா தெரிவித்துள்ளார். (ச)

## கௌரவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 27

தையல் பயிற்சி மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கல் மற்றும் சிரேஷ்ட பிரஜைகள் கௌரவிப்பு நிகழ்வு கோப்பாய் தெற்கு கண்ணகை அம் பாள் மாதர் சிக்கன கடனுதவிக் கூட் டுறவுச்சங்கத்தின் ஏற்பாட்டில் இடம் பெறவுள்ளது.

இந்த நிகழ்வு சங்கத்தின் தலைவி திருமதி திலகராணி சர்வானந்தம் தலைமையில் கோப்பாய் தெற்கு மனிக்கோவிலடி பொதுநோக்கு மண் டபத்தில் எதிர்வரும் முதலாம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது. (ச-25)

## கட்டடம் திறப்பு

யாழ்ப்பாணம், பெப். 27

இணுவில் பொது நூலகம் மற்றும் இணுவில் சன சமூக நிலையத்தின் ஏற்பாட் டில், இணுவில் ஆரம்ப மருத்துவப் பராமரிப்பு நிலைய பார்வையாளர் வர வேற்புக் கட்டடத் திறப்பு விழா, நிலையத்தின் தலை வர் ம.கஜந்தரூபன் தலை மையில் எதிர்வரும் முத லாம் திகதி சனிக்கிழமை மு.ப. 9 மணிக்கு நடைபெற வுள்ளது.

பிரதம விருந்தினராக உடு வில் சுகாதார [illegible] மருத்துவ அதிகாரி கெ. இந்திரமோ கன், சிறப்பு விருந்தினராக இணுவில் ஆரம்ப மருத் துவப் பராமரிப்பு நிலையப் பொறுப்பு உத்தியோகத்தர் திருமதி கலாரதி நடராஜன் ஆகியோர் கலந்துகொள்ள வுள்ளனர். (ச-25)

## பெருந்திருவிழா

சாவகச்சேரி, பெப்.27

சாவகச்சேரி- சங்கத்தானை ஸ்ரீ மீனாட்சி அம்பாள் கோவில் வருடாந்த பெருந்திருவிழா எதிர்வ ரும் 3 ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடை பெறவுள்ளன.

எதிர்வரும் 11 ஆம் திகதி தேர்த்திரு விழாவும் மறுநாள் மாசிமக நன்னா ளில் தீர்த்தோற்சவமும் இடம்பெறும். திருவிழாக் கிரியைகள் சிவஸ்ரீ கு.சண்முகராஜக்குருக்கள் தலை மையில் நடைபெறும். (ச-25,9)



## தக்காளி கிலோ ரூ.60

யாழ்ப்பாணம்,பெப்.27

யாழ். குடாநாட்டில் தக்காளிப்பழத்தின் விலை சடுதியாகச் சரிவடைந்துள்ளது. தக்காளிப்பழச் செய்கை அதிக விளைச்சலைக் கண்டுள்ள நிலையில் சந்தைகளில் அதிகளவில் தக்காளிப்பழங்கள் வந்துசேர்கின்றன. இதனால் தக்காளிப்பழம் சந்தைப்படுத்தலின்றிக் காணப்படுவதுடன் நஷ்டத்தையும்எதிர்கொள்ளநேரிடுவதாகவிவசாயிகள்தெரிவிக்கின்றனர். [illegible] தக்காளிப்பழம் கிலோ 60 ரூபாவாக விற்பனை செய்யப்படு கின்றது. (ச-33-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

நம்பிக்கை குறையும்போது ஒவ்வொரு மனிதனும் நெறியற்ற கொள்கையை மேற்கொள்கிறான்.


—ஜோன்மில்டன்—

# பேச்சுரிமையும் பிரதிநிதித்துவமும்!

'பாதாள உலகக் குழுக்கள் மோதுகின்றன என்பதற்காக நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதற்றமடையவேண்டியதில்லை' என்று தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினரான லக்ஸ்மன் நிபுண. பாதாளக் குழுக்கள் மோதுவதைப் பார்த்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் அச்சமடைகின்றனர் என்றால், அவர்களுக்கும் பாதாள உலகக் குழுக்களுடன் தொடர்புள்ளது என்றே அர்த்தம் என்றும் அவர் 'அரிய கண்டுபிடிப்பொன்றை' நிகழ்த்தியிருக்கின்றார். பாதாள உலகக் குழுக்களின் செயற்பாடுகளில் அரசியற்தலையீடுகள் மற்றும் அரச பின்புல ஆதரவுகள் இருந்தன என்பதை மறுத்துரைப்பதற்கில்லை. ஆனால், அதற்காக பாதாள உலகக் குழுக்கள் மோதுகின்றன என்பதற்காக நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதற்றப்படவும், அச்சப்படவும் தேவையில்லை என்று கூறுவதானது 'அரசியல் முதிர்ச்சியற்ற தன்மையின்' வெளிப்பாடே அன்றி வேறில்லை.

ஒருநாட்டில் பாதாள உலகக் குழுக்கள் தலைதூக்குவதும், அதனால் ஏற்படும் வன்முறைகளும் அந்தக் குழுக்களைச் சார்ந்த பிரச்சினைகள் மட்டுமே என்று குறுக்கிக்கொள்ளமுடியாது. நாடாளுமன்ற உறுப்பினர் ஹர் டி சில்வா சுட்டிக்காட்டியதைப்போன்று, இது நாட்டின் தேசியப் பாதுகாப்பில் மட்டுமல்லாமல் பொருளாதாரத்திலும் பாரதூரமான தாக்கங்களை ஏற்படுத்தக்கூடிய விடயம். எனவே, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது பாதுகாப்பைக் கருத்திற்கொண்டுதான் கருத்துத் தெரிவிக்கின்றனர் என்ற பொருள்பட அதை அர்த்தப்படுத்துவதும் அணுகுவதும் தவறானது என்பது மட்டுமல்ல, ஏற்கத்தகாததுமாகும். இலங்கையின் பொருளாதாரம் சுற்றுலாத்துறையைச் சார்ந்ததாகவே உள்ளது. அத்துடன், சுயமான முதலீடுகளை மேற்கொள்ளமுடியாத நிலையில், புலம்பெயர் முதலீடுகளை எதிர்பார்த்துத்தான் அரசாங்கமும் காத்திருக்கின்றது. ஆதலால், பாதாளக் குழுக்களின் செயற்பாடும் செல்வாக்கும் மிகையாக அதிகரிக்கும் ஒருநாட்டுக்கு சுற்றுலாவிகளும் வரமாட்டார்கள், முதலீடுகளையும் எவரும் மேற்கொள்ள விரும்பமாட்டார்கள் என்ற குறைந்த பட்சப் புரிதலை நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் நிபுண ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

அத்துடன், நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் நிபுணவைப் போன்றும், தேசிய மக்கள் சக்தியின் இதர நாடாளுமன்ற உறுப்பினர்களைப் போன்றும்தான் எதிர்க்கட்சியில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களும் மக்களால்தான் தெரிவுசெய்யப்பட்டிருக்கின்றனர். எனவே, மக்களின் பாதுகாப்புத் தொடர்பிலும், இலங்கையில் இடம்பெறும் அசம்பாவிதங்கள் தொடர்பிலும், தேசியப் பாதுகாப்புத் தொடர்பிலும் கேள்வி கேட்பதற்கும், விவாதிப்பதற்கும் அவர்களுக்கு முழு உரிமையும் தகுதியும் உள்ளன. இவ்வாறிருக்கையில், அறுதிப் பெரும்பான்மையுள்ளது என்பதற்காக எதிர்த்தரப்பினரின் உரிமைகளை மழுங்கடிக்கச் செய்யும் வகையில் கருத்துக்களைப் பகிர்வது அபத்தம். நாடாளுமன்றத்தில் வெறும் மூன்றேமூன்று உறுப்பினர்களுடன் காலம்கடத்திய தேசிய மக்கள் சக்தியினருக்கு இந்தப் புரிதல் இருக்கவேண்டியது மிகவும் அவசியம்.




# வறுமையை ஒழிப்பதற்காக 'பிரஜா சக்தி' வேலைத்திட்டம்

**கொழும்பு, பெப்.27**

**வறுமையை ஒழிப்பதற்காக பலவித அணுகுமுறைகளைக் கொண்ட ஒருங்கிணைந்த வேலைத்திட்டமாக 'பிரஜா சக்தி' வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.**

தற்போது இலங்கையின் ஒட்டுமொத்த சனத்தொகையில் ஆறு பேரில் ஒருவர் பல்பரிமாண வறுமைக்குட்பட்டு உள்ளதுடன், சனத்தொகையில் 95.3 சதவீதமானவர்கள் கிராமிய மற்றும் பெருந்தோட்டங்களில் வாழ்கின்றனர்.

இலங்கையில் இதுவரை நடைமுறைப்படுத்தப்பட்டுவந்துள்ள வறுமை ஒழிப்பு வேலைத்திட்டங்களின் இறுதிப்பெறுபேறுகள் பற்றி எந்தவொரு தரப்பினரும் திருப்தியடையவில்லை என்பதைக் கருத்துகள் மூலம் காணக்கூடியதாகவுள்ளது. புதிய அரசின் கொள்கைக்கமைய 'வளமான நாடு - செழிப்பான வாழ்க்கை' எனும் தொலைநோக்கை வெற்றியடையச் செய்வதற்கு இயலுமாகும் வகையில் பல்வித அணுகுமுறைகளுடன் கூடிய ஒருங்கிணைந்த வேலைத்திட்டமாக 'பிரஜா சக்தி' வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக கிராம அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (எ-இ)

## ஏற்றுமதி வருவாய்; ஜனவரியில் உயர்வு

கொழும்பு, பெப்.27

இலங்கையின் ஏற்றுமதி வருவாய் 2025 ஆம் ஆண்டின் ஜனவரி மாதத்தில் 1.3 பில்லியன் டொலரைக் கடந்துள்ளது என்று இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு ஜனவரி மாதத்துடன் ஒப்பிடும்போது, பொருள்கள் ஏற்றுமதி வருவாயில் 3.51 சதவீத அதிகரிப்பும், விவசாய ஏற்றுமதி வருவாயில் 14.87 சதவீத அதிகரிப்பும் ஏற்பட்டுள்ளன.

தொழில்துறை ஏற்றுமதி வருவாயில் 0.08 சதவீதமும், சேவை ஏற்றுமதி வருவாயில் 37.87 சதவீதமும் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.

அதன்பிரகாரம் இந்த ஆண்டு ஜனவரியில் பொருள்கள் மற்றும் சேவைகள் உட்பட மொத்த ஏற்றுமதி வருவாய் 1.334.19 மில்லியன் அமெரிக்க டொலராகப் பதிவாகியுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

## மதுபான நுகர்வு வீழ்ச்சி

கொழும்பு, பெப்.27

நாட்டில் மதுபான நுகர்வு 9.5% வீழ்ச்சியடைந்துள்ளதாக நிதி அமைச்சு வெளியிட்டுள்ள தகவல்களில் தெரியவந்துள்ளது.

2024 ஆம் ஆண்டின் முதல் 10 மாதங்களில், முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது.

மதுவரி 14% அதிகரிக்கப்பட்டதன் விளைவாக இந்த மாற்றம் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

அதற்கமைய 2023ம் ஆண்டில் 28.2 மில்லியன் லீற்றராகப் பதிவான மதுபான நுகர்வு, 2024 ஆம் ஆண்டில் 27.2 மில்லியன் லீற்றராக குறைந்துள்ளது. எனினும், 2024 ஆம் ஆண்டின் முதல் 10 மாதங்களில் மாத்திரம் மதுவரி வருவாய் 167.7 பில்லியன் ரூபாவாகக் கணிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## யானைகள் இறப்பு; தடுக்க புதிய செயலி

தொடருந்துகளில் சிக்கி யானைகள் இறப்பதைத் தடுக்கும் நோக்குடன் பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்கள் புதிய செயலி ஒன்றைக் கண்டுபிடித்துள்ளனர்.

இந்தச் செயலி 500 மீற்றருக்கு அப்பால் யானை நின்றாலும் உடனே காட்டிக்கொடுத்துவிடும். வன விலங்கு திணைக்களமும் தொடருந்துத் திணைக்களமும் இந்தச் செயலிக்கு அங்கீகாரமளித்துள்ளன. (ச-25, 6)



# தாய்லாந்து, ஜப்பானில் இருந்து வாகனங்கள் இறக்குமதி

கொழும்பு, பெப். 27

தாய்லாந்து மற்றும் ஜப்பானிலிருந்து இலங்கைக்கு கப்பல்களினூடாக இன்று வாகனங்கள் வந்து சேரவுள்ளன என்று வாகன இறக்குமதியாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

தாய்லாந்திலிருந்து எடுத்துவரப்படும் டபிள் கப் ஒன்றின் விலை 24 மில்லியன் ரூபா தொடக்கம் 25.5 மில்லியன் ரூபா வரையும் விற்பனை செய்யப்படவுள்ளது. ஜப்பானிலிருந்து எடுத்துவரப்படும் வகனர் ஒன்றின் விலை 6.5 மில்லியன் ரூபா வரை காணப்படும். இவையாவும் புத்தம் புதிய வாகனங்கள் எனவும் வாகன இறக்குமதியாளர் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது. (ச-25, 6)

நாளை
வெள்ளிக்கிழமை - மாசி - 16
28.02.2025
சுபநேரம் : 06.28 - 07.08
ராகுகாலம் :10.58 - 12.28

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனைகளைத் தறிப்பதற்கு கட்டுப்பாட்டுச்சட்டம்

## யாழ்.மாவட்டச் செயலர் நடவடிக்கை

**யாழ்ப்பாணம்,பெப்.27**

**யாழ்.மாவட்டத்தில் பனைமரங்களைத் தறிப்பதற்கான கட்டுப்பாட்டுச் சட்டம் மற்றும் அனுமதி வழங்கல் என்பவை தொடர்பில் விரைவில் புதிய நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்று யாழ்.மாவட்டப் பதில் செயலர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்துள்ளார்.**



பனைமரம் தறிப்பதற்கான கட்டுப்பாட்டுச்சட்டம் மற்றும் அனுமதி தொடர்பான கலந்துரையாடலொன்று யாழ். மாவட்டப் பதில் செயலர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம் பெற்றது. இதில் பனைமரம் தறிப்பதற்கான அனுமதியை வழங்குவதற்கு ஐந்துபேர் கொண்ட குழுவொன்றை அமைத்து அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு அனுமதி வழங்குவதற்கும் பிரதேச செயலகங்களினூடாக வழங்கப்படும் வீட்டுத்திட்டங்களில் பனைமரம் தறிப்பதற்கு நிபந்தனைகளுடன் அனுமதி வழங்க கட்டுப்பாட்டுச் சட்டம் ஒன்றைக் கொண்டுவரவும் தீர்மானிக்கப்பட்டது. அத்துடன் பனை அபிவிருத்திச் சபையினால் யாழ். மாவட்டத்தில் பனம் விதை நடுவதற்கான இடங்கள் காணப்படுமாயின் அதற்கான இட அமைவு தொடர்பான விடயத்தை பிரதேச செயலாளர்களை அறிக்கையிடுமாறும் மாவட்டச்செயலர் தெரிவித்தார். (ச-33-27,66)



## மரணச்சடங்கில் விபத்தை ஏற்படுத்திய வாகனம் மீட்பு

யாழ்ப்பாணம், பெப். 27

கோப்பாயில் கடந்த வாரம் இடம்பெற்ற மரணச்சடங்கொன்றில் விபத்தை ஏற்படுத்திவிட்டுத் தப்பிச் சென்ற வாகனம் நேற்றுப்புதன்கிழமை மீட்கப்பட்டுள்ளது.

பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், கைதடி தச்சன்தோப்புப் பகுதியில் குறித்த வாகனம் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், கோப்பாய் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது. எனினும் சந்தேகநபர்கள் எவரும் கைதுசெய்யப்படவில்லை.

இந்த விபத்தில் அறுவர் படுகாயமடைந்ததுடன் ஒருவர் உயிரிழந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-25,27)

## சிறந்த நூலுக்கான விருது சுற்றறிக்கையில் மாற்றம்

யாழ்ப்பாணம், பெப். 27

"வடக்கு மாகாண சிறந்த நூலுக்கான விருது 2025 " தொடர்பில் வட மாகாணப் பண்பாட்டலுவல்கள் அலகினால் கடந்த மாதம் வெளியிடப்பட்ட சுற்றுநிருபத்துக்கு மேலதிகமாக கடந்த புதன்கிழமை புதியசுற்றுநிருபம் வெளியிடப்பட்டுள்ளது. அதில் பழைய சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்ட சில விதிமுறைகள் மாற்றியமைக்கப்பட்டுள்ளதுடன் சில விதிமுறைகள் நீக்கப்பட்டுள்ளன. புதிய சுற்று நிருபத்துக்கமைய விண்ணப்பங்களை கலாசார உத்தியோகத்தர்களூடாகச் சமர்ப்பிக்கமுடியும். சுற்றுநிருபம் தொடர்பான விபரங்களை www.np.gov.lk/ www.edumin.np.gov.lk எனும் இணையத்தளங்களின் மூலமாகப் பெற்றுக்கொள்ளமுடியும். மேலதிக தகவல்களுக்கு 0212054105 எனும் இலக்கத்துடன் தொர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25)


## சங்குக் கூட்டணியா ? இன்னும் முடிவில்லை

யாழ்ப்பாணம், பெப்.27

உள்ளூராட்சித் தேர்தலில் சாதக பாதக நிலைமைகளைக் கருத்திற்கொண்டு கூட்டணியில் இணைவோம் எனத் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்றைய காலகட்டத்தில் ஒரு சில தரப்புகளுடன் இணைந்து பயணிக்காவிட்டாலும் இந்தக் காலப் பகுதி மிக மிகத் தீர்க்கமானது. ஆகவே இந்தக் காலப்பகுதியில் பலம், பலவீனம் என்பவற்றை அறிந்து எந்தக் கட்சிகளுடன் கூட்டணி வைப்பது என்பது தொடர்பில் தீர்மானம் எடுப்போம்- என்றார். (ச-125)



பொன்னாலை சின்னக்குளத்தை மூடிமறைத்து வீதியில் போக்குவரத்துக்கு இடையூறாகக் காணப்பட்ட பற்றைகள் வலிகாமம் மேற்குப் பிரதேசசபையினரால் கனரகவாகனத்தின் உதவியுடன் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை வெட்டி அகற்றப்பட்டன. (ச-41-66)


## திடீர் மழையால் அறுவடை பாதிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.27

யாழ்.குடாநாட்டில் தற்போது பரவலாகப் பெய்துவரும் மழையால் நெல் மற்றும் வெங்காயப் பயிர்களின் அறுவடை பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

வெங்காயம் மற்றும் நெல் என்பவற்றை அறுவடைசெய்து உலரவைத்தபோது தீடீரெனப் பெய்த மழையால் நனைந்து அவை பாதிப்படைந்துள்ளன.

தொடர்ந்து மழை பெய்தால் அறுவடை முற்றாகப் பாதிக்கப்படும் என்றும் செய்கையாளர்கள் தெரிவித்துள்ளனர். (ச-33-17)



## தொழில்முனைவோருடனான கலந்துரையாடல் சுவிஸில்

ஜெனீவா, பெப்.27

சுவிட்ஸர்லாந்து தமிழர் சமூக பொருளாதார அபிவிருத்தி நிறுவகத்தின் ஏற்பாட்டில், சுவிட்ஸர்லாந்தில் வாழும் தமிழ்பேசும் தொழில்முனைவோர்கள் மற்றும் முதலீட்டாளர்களுடான ஒன்றுகூடல் நிகழ்வு நிறுவகத்தின் தலைவர் இளையதம்பி சிறிதாஸ் தலைமையில் சூரிச்கில்டன் கார்டன் விடுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் அமைப்பின் செயலாளர் இ. ரவிந்திரன், சமூக ஆர்வலர் சசிக்குமார் மற்றும் சுவிஸ் நாட்டில் வாழும் தமிழ் வர்த்தகர்கள், சமூக ஆர்வலர்கள் கலந்துகொண்டனர். இதன்போது, சுவிஸில் வாழும் இலங்கையைப் பூர்வீகமாகக்கொண்ட 18 வயதுக்கு மேற்பட்ட தொழில்முனைவோர்கள் மற்றும் சமூக செயற்பாட்டாளர்கள் அமைப்பின் உறுப்புரிமையைப்பெறமுடியும் எனத் தெரிவிக்கப்பட்டது. அத்துடன் இலங்கையில் புதிய முதலீடுகள், தொழில் முயற்சியாண்மை வேலைத்திட்டங்களில் ஈடுபடவிரும்பும் தொழில்முனைவோருக்கு ஆலோசனைகளையும் ஒத்தாசைகளையும் வழங்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ச-25)



கிளிநொச்சி முழங்காவில் மகாவித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டியின் ஓர் அங்கமான வீதியோட்ட நிகழ்வு அதிபர் தலைமையில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது. வீதியோட்ட நிகழ்வில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வும் நடைபெற்றது. (ச-41-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# திருக்கேதீச்சரத்தில் மஹா சிவராத்திரி


மன்னார், பெப். 27

நாயன்மார்களால் பாடல் பெற்ற வரலாற்றுச் சிறப்புமிக்க தலங்களில் ஒன்றான மன்னார் திருக்கேதீச்சர ஆலயத்தில் மஹா சிவராத்திரி நிகழ்வு நேற்றுப் புதன்கிழமை வெகுசிறப்பாக இடம்பெற்றது.

இலட்சக்கணக்கான பக்தர்கள் தமது நேர்த்திக்கடன்களைச் செலுத்தியதுடன் வழிபாடுகளிலும் ஈடுபட்டனர்.

சிவராத்திரி நிகழ்வுகளை முன்னிட்டு திருக்கேதீஸ்வர திருப்பணிச் சபையின் ஏற்பாட்டில் பல்வேறுபட்ட இந்து கலாசார நிகழ்வுகள் மற்றும் அறநெறிச் சொற்பொழிவுகளும் இடம் பெற்றன. அதேநேரம் இம்முறை சிவராத்திரி நிகழ்வுக்கு என விசேட பொலிஸ், இராணுவ அதிரடிபடையினரின் பாதுகாப்பு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-25,213,56)





# திருவாசக அரண்மனையில் சிவராத்திரிப் பூசைவழிபாடுகள்

யாழ்ப்பாணம், பெப். 27

நாவற்குழி திருவாசக அரண்மனையில் நேற்றுக் காலைமுதல் சிவராத்திரிப் பூஜைவழிபாடுகள் மிகச் சிறப்பாகவும் பக்திபூர்வமாகவும் இடம்பெற்றன.

பெருமளவான பக்தர்கள் பங்கேற்று பிரதிஷ்டை வழிபாடுகளில் ஈடுபட்டதுடன் 108 சிவலிங்கங்களுக்கும் பக்தர்கள் குடங்களில் நீர் எடுத்துச்சென்று அபிஷேகம்செய்து தமது விரதத்தை அனுஷ்டித்தனர். (ச-28)


# நகுலேஸ்வரர் தேர்த்திருவிழா

யாழ்ப்பாணம், பெப். 27

ஈழத்தின் பஞ்ச ஈச்சரங்களில் ஒன்றாக விளங்கும் வரலாற்றுச் சிறப்புமிக்க கீரிமலை நகுலேஸ்வரம் நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வரசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழாவின் தேர்த் திருவிழா மகாசிவராத்திரி நன்னாளான நேற்றுப் புதன்கிழமை வெகு சிறப்பாக இடம்பெற்றது.

நகுலாம்பிகை சமேத நகுலேஸ்வரப் பெருமான், விநாயகர், வள்ளிதெய்வானை சமேத முருகப்பெருமான் ஆகிய தெய்வங்கள் உள்வீதியில் திருநடனத்துடன் எழுந்தருளி உலா வந்து முத்தேர்களில் ஆரோகணித்தனித்தனர். தொடர்ந்து ஆயிரக்கணக்கான அடியவர்கள் புடைசூழ அரோகராக் கோஷங்களுக்கு மத்தியில் பெருவீதியில் முத்தேர்களின் பவனி இடம்பெற்றது. (ச-66)





மகா சிவராத்திரியை முன்னிட்டு பருத்தித்துறை சிவன்கோவிலில் நேற்றுப் புதன்கிழமை காலை முதல் விசேட பூசைவழிபாடுகள் இடம்பெற்றன. விசேட பூசைவழிபாடுகளில் பெருமளவான பக்த அடியார்கள் பங்கேற்றனர். (ச-100)

# வடக்கு, கிழக்கில் மழை நீடிக்கும்

தென்கிழக்கு வங்காளவிரிகுடாவில் உருவாகிய காற்றுச் சுழற்சி காரணமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளில் எதிர்வரும் 3 ஆம் திகதி வரை மழை நீடிக்கும் என்று புவியியல்துறை விரிவுரையாளரும் வானிலை ஆய்வாளருமான நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

அடுத்த சில நாள்களுக்கு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காற்று வேகமாக குறிப்பாக மணிக்கு 30 முதல் 50 கி.மீ. வேகத்தில் வீசக்கூடும். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் கரையோரப் பகுதிகளில் காற்று மணிக்கு 40 முதல் 60 கி.மீ. வேகத்தில் வீசக்கூடும். அதேவேளை, இன்று முதல் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் கடற்பகுதிகள் கொந்தளிப்பான நிலையில் காணப்படும் என்பதனால் மீனவர்கள் கடலுக்குச் செல்வதைத் தவிர்க்கவும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-25)



# மணல் கடத்தல் இருவர் கைது!

யாழ்ப்பாணம், பெப். 27

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோவிலாக்கண்டிப் பகுதியில் சட்டவிரோதமாக மணல் ஏற்றிக்கொண்டிருந்த இருவர் உழவு இயந்திரத்துடன் சாவகச்சேரிப் பொலிஸாரினால் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர். சாவகச்சேரிப் பொலிஸ் நிலைய சட்டவிரோதச் செயற்பாடுகள் மற்றும் போதைப்பொருள்தடுப்புப்பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கமைய சாவகச்சேரி பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரியின் வழிநடத்தலில் இந்தக் கைது இடம்பெற்றது. (ச-28)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 46 பேர் இறப்பு!

சூடானில் இராணுவ விமானம் ஒன்று பொதுமக்களின் குடியிருப்புக்குள் வீழ்ந்து விபத்துக்கு உள்ளானதில் 46 பொது மக்கள் உயிரிழந்துள்ளனர். (ம)

## குடியுரிமை!

அமெரிக்கக் குடியுரிமையை எவரேனும் பெறுவதற்கு 5 மில்லியன் டொலர்களை வழங்கும் பட்சத்தில் அது தொடர்பில் பரிசீலிக்கப்படும் என்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அறிவித்துள்ளார். (ம)


## நினைவழியா ஆறாம் ஆண்டு

எங்களிடம் 12 . 04 . 1938



இறைவனிடம் 06 . 03 . 2019

அமரர் வைத்திய கலாநிதி

**நடராஜா சிவராஜா**

திதி: அபரபக்க அமாவாசை

நீங்கள் எம்மைவிட்டு எங்கும் செல்லவில்லை
எப்போதும் அருகில் இருந்து வழி
நடத்துகிறீர்கள்

**உங்கள் ஆன்மா இறைவனடியில் சாந்தி பெற
பிரார்த்திக்கிறோம்**

47/3, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

மலைஅரசி சிவராஜா
மற்றும் குடும்பத்தினர்.

(cs/57605) (N-1)


## ஆதன உரிமைபெயர்மாற்ற அறிவித்தல்

| | |
|---|---|
| வலிகாமம் வடக்குபிரதேசசபை | : மல்லாகம் உப அலுவலகம் |
| உரிமையாளர் பெயர் | : பரமநாதன் சர்மிலனும் பெண் அபிராமியும் |
| விண்ணப்பதாரர் பெயர் | : திரு. பரமநாதன் சர்மிலன் |
| முகவரி | : கணேஸ்வரம், அளவெட்டி |

வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் மல்லாகம் உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் 18, பெரிய கிணற்றடி வீதியில் ஆதன இல. 61 இல் அமைந்துள்ள மல்லாகம் கோயிற்பற்று, அளவெட்டி இறை "வித்துருவன்" என்ற ஆதனம் உரிமைகோருபவர் சொந்தக்காரர் என்ற பெயரில் எமது சோலைவரி ஆதனப் பதிவேட்டில் பதியப்பட்டு காணப்படுகின்றது.

குறித்த ஆதனமானது 20.05.2020 ஆந் திகதிய பிரசித்த நொத்தாரிஸ் கு. விசுவலிங்கம் அவர்கள் முகதாவில் இலக்கம் 8870 இல் அத்தாட்சிப்படுத்திய அறுதி மூலம் "வித்துருவன்" நிலப்பரப்பு 3 விஸ்தீரணமுள்ள ஆதனம் விண்ணப்பதாரரை வந்தடைந்துள்ளது.

8870ம் இலக்க உறுதி யாழ் காணிப்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள G145/11 இலக்க காணிப்பதிவுப் புத்தகப் பிரதி இவ்விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. குறித்த 8870ம் இலக்க உறுதியில் குறித்த ஆதனத்தை விற்பனை செய்த சச்சிதானந்ததாஸ் ஐயபிரசாந், நவரத்தினம் ரவீந்திரன் மனைவி மாலதி, ஆனந்தகுமார் முரளீதரன் மனைவி சகுந்தலா, சுப்பரமணியம் பாலசாந்தன் மனைவி சியாமளா, குலசிங்கம் விவேகானந்தன் மனைவி சுசிலா, நிர்மலா பரமநாதன் ஆகியோரில் பிரசித்த நொத்தாரிசு கு. விசுவலிங்கம் முகதாவில் 2012.04.16 ம் திகதி 4183ம் இலக்கத்தில் நிறைவேறிய உறுதிப்படி 1ம் பேரின் நன்கொடையும், பிரசித்த நொத்தாரிசு இ.காசிநாதர் முகதாவில் 1957.01.27ம் திகதி 2238ம் இலக்கத்தில் நிறைவேறிய உறுதிப்படி ஏனையோரின் பிதா, மாதாவழி வந்த உரிமையும் ஆட்சியுமானது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. 4183ம் இலக்க, 2238ம் இலக்க உறுதிகளும், குறித்த உறுதிகள் யாழ்ப்பாண காணிப்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள முறையே H859/130, H216/16 இலக்க காணிப்புத்தகப் பிரதிகள் இவ்விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. மேற்குறித்த பிரசித்த நொத்தாரிசு கு. விஸ்வலிங்கம் முகதாவில் 2012.04.16ம் திகதி நிறைவேறிய 4183ம் இலக்க உறுதியில் அதன் தாயுறுதிகளாக 1957.06.19ம் திகதி 2355ம் இலக்க (H305/185), 1957.01.27ம் திகதி 2237ம் இலக்கத்தில் (H302/154) ஆகிய உறுதிகள் குறிப்பிடப்பட்டுள்ள போதும் இவை எந்த நொத்தாரிசு முகதாலில் நிறைவேற்றப்பட்டது என்பது தொடர்பான விபரங்கள் எவையும் குறிப்பிடப்படவில்லை மேலும் (H305/185). (H302/154) காணிப்பதிவுப் புத்தக பிரதிகளும் இவ்விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்படவில்லை

**ஆதனவிபரம்**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் வடக்குப் பகுதி, மல்லாகம் கோவிற்பற்று அளவெட்டி இறை வலிகாமம் வடக்கு தெல்லிப்பளை பிரதேச செயலகப் பிரிவில் வலிகாமம் வடக்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட கணேஸ்வரம் J/218 கிராமஅலுவலர் பிரிவில் அமைந்துள்ள "வித்துருவன்" நிலப்பரப்பு 08 குழி 11.383+ நிலப்பரப்பு 09 குழி16 இல் குழி 17 நீக்கி மிகுதி ஒருங்கு சேர்ந்து நிலஅளவையாளர் B. பிரணவனின் பட இலக்கம் 2020004 திகதி 16.03.2020 படத்தில் துண்டு ஒன்று தொடக்கம் துண்டு ஐந்து வரையான துண்டுகளாக காட்டப்பட்டுள்ளது.

அளந்து கண்டபடி மொத்த விஸ்தீரணம் நிலப்பரப்பு 16 குழி 17.14 இதில் மேற்படி பட இல 2020004 படத்தில் முதலாம் துண்டுக் காணி விஸ்தீரணம் நிலப்பரப்பு (03) மூன்று இந்த நிலப்பரப்பு மூன்றுக்கும் ஆன எல்லைகள்

| | |
|---|---|
| **கிழக்கு** | : மகாலிங்கம் தினேஸ்குமாருக்கும் மனைவி கனிமொழிக்கும் உரியது |
| **வடக்கு** | : றோட்டு |
| **மேற்கு** | : றோட்டு |
| **தெற்கு** | : நடராசா உதயகுமாருக்கும் மனைவி சிவரஞ்சினிக்கும் உரியது |

இவ்வெல்லைப்படி இதடங்கலும்

மேற்குறித்த ஆதனத்தை பரமநாதன் சர்மிலன் பெண் அபிராமி என்னும் பெயரில் ஆதன பெயர்மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்த முப்பது (30) நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் பரமநாதன் சர்மிலன் பெண் அபிராமி எனும் பெயருக்கு ஆதன உரிமைமாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதன உரிமைமாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்குபிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. சுந்தரேஸ்வரன் சுதர்ஜன்
செயலாளர்,
வலிகாமம் வடக்குபிரதேசசபை,
காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி).**

(CS.2989) (p-1)


இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி
முன்னாள் தலைவர்

**மாவை சேனாதிராசா**

அவர்களின்

**31ம் நாள் நினைவஞ்சலி**

**London, UK**



இடம்: **Harrow Arts Centre**
171 Uxbridge Road, Hatch End,
Middlesex Ha5 4EA UK


திகதி & நேரம்: **28th February 2025 | 6.30pm to 9.00pm (UK நேரம்)**

**Free Car Park also other details**
Tube: Harrow on the hill or pinner (Metropolitan Line)
Bus : H14, H12, 182
Rail : London Overground from Euston to Hatch End

இங்ஙனம்
**ITAK (Forum) UK தலைவர்**
**திரு. சொக்கநாதன் கேதீஸ்வரன்**
**admin@itak.uk**
**00 44 7816453544**



## ஈரவிழிகளுடன் ஆறாம் ஆண்டு நினைவலைகள்



**அமரர் பேரம்பலம் நடேசபிள்ளை**

அன்னையின் மடியில் **23.04.1940**
வேரக்கேணியான் அடியில் **06.03.2019**

ஆண்டுகள் ஆறு உருண்டே ஓடிடினும்
உம் நினைவுகளால் நிறைந்த எம் மனம்
உமை எண்ணி தவிக்குதே அப்பா!
நினைவிலும் சரி நாம் செயும் செயலிலும் சரி
உம் ஞாபகங்கள் தினம் தினம்
எம்மை வாட்டுதே அப்பா !
உம் இடத்தே நாம் இருந்து
எதைச்செய்திடினும் உமக்கு ஈடாய்
ஏதும் இல்லையே அப்பா!
அரனடி நிழல் தன்னில் நீங்கள்
இளைப்பாறுவதே எமக்காய் இருக்கும்
ஓர் ஆறுதல் அப்பா!
செயும் செயல்கள் யாவும்
உமை நெஞ்சினில் நிறுத்தி
நித்தமும் நாம் நினைக்கின்றோமே அப்பா!
மறுஜென்மம் என்றொன்று உண்டெனில்
எமக்கே ஆன ஒரு வரமாய்
எம்மிடமே வாருங்கள் அப்பா!
ஆவலோடு காத்திருக்கின்றோம் நாம்
ஆசையாய் உமை காண...!

**ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!**

"நாகபவனம்"

(Cs.575999) (N.1)

என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்
**குடும்பத்தினர்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய பாதுகாப்பைக் காட்டி குழப்பம் ஏற்படுத்த முயற்சி

பிரதமர் ஹரிணி காட்டம்

கொழும்பு, பெப்.27

**நாட்டின் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தத் தேவையான அனைத்து நடவடிக்கை களையும் அரசாங்கம் முன்னெடுக்கும். ஆனால் தற்போதுள்ள நிலைமையை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி குறுகிய அரசியல் இலாபங்களைப் பெற்றுக்கொள்ள முயற்சிக்கும் தரப்பினரை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம் என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.**

அநுராதபுரத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எமது அரசாங்கம் முன்னெடுக்கும். அனைத்துச் சம்பவங்கள் தொடர்பிலும் உடனடியாகச் செயற்பட்டு நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். இதற்குப் பொறுப்புக்கூற வேண்டியவர்கள் தொடர்பில் தராதரம் பாராமல் உரிய நடவடிக்கை எடுத்துள்ளோம். ஆகவே எவரும் அச்சப்படவேண்டிய தேவை கிடையாது. எதிர்க்கட்சிகளுக்கு பேசுவதற்கு ஒன்றுமில்லை என்பதற்காக ஒரு சில விடயங்களை தூக்கிப் பிடித்துக்கொண்டு கூச்சலிட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

எதிர்க்கட்சியில் உள்ள பலர்மீது குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்ட நிலையில் அது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதனாலேயே அவர்கள் இவ்வாறான விடயங்களைக் கூறி எம்மைச் சோர்வடையச் செய்யப் பார்க்கின்றனர்.

நாம் நாட்டு மக்களுக்குப் பொய்கூற வில்லை. நாம் என்ன செய்துக்கொண்டிருக்கிறோம் என்பதை மக்கள் நன்கறிவர். தேசிய பாதுகாப்புத் தொடர்பில் எவ்வித சந்தேகமும் கொள்ளத்தேவையில்லை. தேசிய பாதுகாப்புத் தொடர்பில் போலியான விடயங்களைக்கூறி கடந்த காலங்களில் அரங்கேற்றப்பட்ட விடயங்கள் தொடர்பில் நாம் நன்கறிவோம்.

இந்த விடயம் தொடர்பில் எமது முப்படை உரிய நடவடிக்கை எடுக்கும் என நாம் நம்புகிறோம் - என்றார். (எ-இ)

## மழைதொடர்ந்தால் வெள்ளை ஈ கட்டுப்படும்

யாழ்ப்பாணம்,பெப்.27

தொடர்ந்து மழை பெய்தால் தென்னைகளில் பரவிய வெள்ளை ஈக்களின் தாக்கம் குறைவடையலாம் என்று தென்னைச் செய்கையாளர்கள் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்தில் வெள்ளை ஈக்களின் தாக்கம் பரவலாகக் காணப்படுகிறது. இந்த வெள்ளை ஈ தாக்கத்தினால் தென்னை மரங்கள் பாதிக்கப்படுவதோடு காய்க்கும் தன்மையும் குறைவடைகின்றது. இந்த நிலை யில் தற்போது பெய்துவரும் மழை தொடர்ந்து பெய்தால் இதன் தாக்கம் குறைவடைய வாய்ப்புள்ளது என்றும் அவர்கள் சுட்டிக்காட்டினர். (ச-33-17)



பருத்தித்துறை கொட்டடி சித்தி விநாயகர் ஆலய தேர்த்திருவிழா நேற்றுப் புதன்கிழமை அதிகளவான பக்தர்கள் சூழ பக்திபூர்வமாக இடம் பெற்றது. (ச-25, 100)

பாதாளக்கும்பல்களுடன் தொடர்புள்ள

## இராணுவத்தினர் விரைவில் கைது

கொழும்பு,பெப்.27

இராணுவத்திலிருந்து தப்பியோடி பாதாள உலகக் கும்பல்களுடன் தொடர்பு பேணுவோர் விரைவில் கைதுசெய்யப்படுவார்கள் எனப் பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஓய்வுபெற்ற எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துயகோந்தா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிப்பாய்கள் சிலருக்கு பாதாள உலகக்கும்பல்களுடன் தொடர்புள்ளதாகப் புலனாய்வு அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்களே போதை வஸ்துக்கு அடிமையாகிய நிலையில் பாதாள உலகக் குழுக்களுடன் தொடர்பைப் பேணுகின்றமை தெரிய வந்துள்ளது.

இந்தநிலையில் இராணுவத்திலிருந்து தப்பி ஓடியவர்களை விரைவில் கைதுசெய்ய நடவடிக்கை எடுக்கப் படும் - என்றார். (ச-41-6)



## வவுனியா மாவட்டத்தில் பயிர்களுக்கு இழப்பீடு

வவுனியா, பெப். 27

வவுனியா மாவட்டத்தில் 2024/2025 பருவகாலத்தில் மழை காரணமாக பயிரழிவைச் சந்தித்த 1340.2 ஏக்கர் நெற்செய்கைக்கான நட்டஈட்டுக் காசோலை வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்றது.

கமநல மற்றும் கமத்தொழில் காப்புறுதிச்சபையால் முதற்கட்டமாகத் தெரிவுசெய்யப்பட்ட 912 விவசாயிகளுக்கான 16.81 மில்லியன் ரூபா நட்டஈட்டுக் காசோலைகள் இதன்போது வழங்கப்பட்டுள்ளன. (ச-110)

# பன்முகத்தன்மையை மதிப்பதை சிவராத்திரியில் உறுதிசெய்வோம்

எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, பெப்.27

இலங்கை பல மதங்கள், பல இனங்கள் கொண்ட நாடாக இன, மத, கலாசார மற்றும் பன்முகத்தன்மையின் அழகையும் மதிப்பையும் அங்கீகரிப்பதற்கு சிவராத்திரி தினத்தில் நாம் மறந்துவிடக்கூடாது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

மகா சிவராத்திரி தினத்தை முன்னிட்டு வெளியிட்டுள்ள வாழ்த்துச்செய்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மகா சிவராத்திரி தினத்தில் வாழ்த்துச் செய்தி அனுப்புவதை பாக்கியமாகக் கருதுகிறேன்.

இது சிவபெருமானுக்கு யாகம் செய்யும் இந்து பக்தர்களின் சமயப் பண்டிகையாகும். இதில் இந்துசமய பக்தர்கள் இரவில் விரதமிருந்து சிவபெருமானுக்கு பூஜை செய்வதன் மூலம் மாயை எனும் இருள் நீங்கி அறிவொளி பிறக்கட்டும் என்றும் பிரார்த்தனையை செய்கின்றனர்.

இந்த நற்பண்புகளின் அடிப்படையில் நாம் ஒரு நாடாகச் செயற்பட்டால், இருள் நீங்கி, ஞான ஒளியுடன், தற்போதுள்ள வங்குரோத்து நிலையிலிருந்து விடுபட்டு அமைதி, வளம், நல்லிணக்கம் ஆகியவற்றை ஏற்படுத்த முடியும் என்பது எனது நம்பிக்கை.

இது நம் நாட்டின் எதிர்காலத்திற்கு பெரும் உதவியாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

## ஒன்லைனில் பணபரிவர்த்தனை கட்டணம் குறைப்பு

கொழும்பு, பெப்.27

இணையவழி அல்லது ஒன்லைன் மூலம் பணப்பரிமாற்றங்களை மேற்கொள்ளும் போது வங்கிக்கணக்கிலிருந்து கட்டணமாக வசூலிக்கப்படும் தொகை ஐந்து ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது.

இந்த புதிய கட்டணமாற்றத்தின்படி, இனிமேல் ஒன்லைன் மூலம் பணம் பரிமாறும் போது ரூபாய் 25 மட்டுமே வங்கிக்கணக்கிலிருந்து கழிக்கப்படும் எனக் கூறப்படுகின்றது.


மக்கள் டிஜிட்டல் பரிவர்த்தனைகளை அதிகம் பயன்படுத்தி பயன்பெறவேண்டும் என்பதற்காகவே இந்தக் கட்டணக்குறைப்பை நடைமுறைப் படுத்தியுள்ளதாகக் கூறப்படுகிறது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட்டு. தெற்கில் வன்முறை வாளுடன் மூவர் கைதாகினர்

யாழ்ப்பாணம், பெப். 27
வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வட்டு தெற்குப் பகுதியில் வன்முறையில் ஈடுபட்ட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். மரணச் சடங்கொன்றில் இடம்பெற்ற முரண்பாடு காரணமாகவே அவர்கள் வன்முறையில் ஈடுபட்டுள்ளனர். பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதும் சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் மூவரைக் கைது செய்துள்ள நிலையில், அவர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ம-27)


## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**பொன்னுத்துரை சிறீகரன்**

தோற்றம்
08.09.1955

மறைவு
02.03.2022

திதி : மாசி அமாவாசை

வையகமதில் மாண்புற வாழ்வாங்கு வாழ்ந்து
விண்ணுலகம் கண்டு ஆண்டுகள் மூன்றானதே
தினந்தோறும் பலமுறை உங்கள் நினைவுகள் வந்து போகும்
ஒவ்வோர் இடத்திலும், சொல்லிலும், செயலிலும்
உங்களது தாக்கம் இருந்து கொண்டே தான் உள்ளது
யாரும் இல்லை உங்களைப்போலே
உங்கள் இடம் என்றும் நிரந்தர வெற்றிடமே
நிம்மதியாய் இறைவனிடம் உறைந்திருங்கள்,
எம்மை நல்வழிப்படுத்துங்கள்.

விஜயாபதி
கல்லூரி ஒழுங்கை, மானிப்பாய்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

(es 29837 (N-1)



## மரண அறிவித்தல்

தோற்றம்
10 . 12 . 1953

மறைவு
26 . 02 . 2025



**பாலசுந்தரி பத்மநாதன்**

கொழும்பு மருதானையைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசுந்தரி பத்மநாதன் அவர்கள் நேற்று (26.02.2025) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ரகுநாதன்-ஸ்ரீமணி தம்பதியின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்ற சுப்பிரமணியம்-பத்மாவதி தம்பதியின் அன்பு மருமகளும் பத்மநாதன் அவர்களின் அன்பு மனைவியும் ரமேஸ், ரஞ்சிதா ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவகுமார், புஸ்பகுமாரி ஆகியோரின் மாமியாரும் இராஜேஸ்வரி, கமலசுந்தரி, காலஞ்சென்ற கோமதிஅம்பாள் மற்றும் தங்கராசா, பாக்கியலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் கௌசலாதேவி, யசோதாதேவி, பத்மலோஜனி, பஞ்சலோஜனி, காலஞ்சென்றவர்களான விநாயகமூர்த்தி, தெய்வேந்திரம், திருநாவுக்கரசு, ரகுபதி, மற்றும் சிவசுப்பிரமணியம், ஜெயபாலகிருஸ்ணன், சிவதாஸ், கமலராசா ஆகியோரின் மைத்துனியும் சாஜித்தியா, தியாஸ்ஷனி, கேதுசா ஆகியோரின் பேர்த்தியும் தமிழ்ச்செல்வி, வக்சலாதேவி, சுரேஸ்காந், நிரஞ்சலாதேவி, மோகன்ராஜ், உமாமகேஸ்வரி, வசந்தபிரியா, வசந்தபிரியன், சாளினி, கலைவாணி, பிரதீஸ்வரன், பிரதீபன், பிரமேகலன், பிரமேஸ், நாகவதனி, துசா, சோபிகா, கஜன், சகானா, சாருகா, லர்ஷயா, இயலரசன் ஆகியோரின் சிறிய தாயரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.02.2025) வியாழக்கிழமை பிற்பகல் 01.00 மணியளவில் கட்டுடையில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

214,பொன்னாலை வீதி,
கட்டுடை,
மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 118 5105
077 235 2987


## வடக்கின்...

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும், யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையிலான வடக்கின் பெரும் போர் துடுப்பாட்டப்போட்டியும், யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையிலான பொன் அணிகளின் போர் துடுப்பாட்டப் போட்டியும் இன்று, நாளை மற்றும் நாளைமறுதினம் ஆகிய மூன்று நாள்களிலும் நடைபெறவிருந்தன.

எனினும் காலநிலை மாற்றங்கள் காரணமாக, அந்த ஆட்டங்கள்பிற்போடப்பட்டுள்ளன. இதன்படி, வடக்கின் போர் ஆட்டம் மார்ச் மாதம் 6ஆம், 7ஆம், 8ஆம் திகதிகளில் நடைபெறும் என்று தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது. பொன் அணிகளின் போர் தொடர்பான திகதி விவரங்கள் மீண்டும் உறுதிப்படுத்தப்படும் என்ற அறிவுறுத்தலும் விடுக்கப்பட்டுள்ளது. (அ-ம-125-66)

## வடமாகாணத்தில்...

என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புவியியல்துறையின் தலைவரும், வானிலை ஆய்வாளருமான நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

தென்கிழக்கு வங்காளவிரிகுடாவில் உருவாகிய காற்றுச்சுழற்சி தற்போது இலங்கைக்குத் தென்கிழக்குத் திசையில் 792 கிலோமீற்றர் தொலைவில் காணப்படுகின்றது. இது மேற்குத் திசை நோக்கி நகரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால், தற்போது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் கிடைக்கும் மழை எதிர்வரும் 3ஆம் திகதி திங்கட்கிழமை வரை நீடிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

உருவாகியுள்ள காற்றுச்சுழற்சி ஈரப்பதன் நிறைந்த காற்றை உள்ளிழுப்பதன் காரணமாக அடுத்த சில நாள்களுக்கு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காற்று வேகமாக குறிப்பாக மணிக்கு 30 முதல் 50 கிலோமீற்றர் வேகத்தில் வீசக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதே வேளை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் கரையோரப் பகுதிகளில் காற்று மணிக்கு 40 முதல் 60 கிலோமீற்றர் வேகத்தில் வீசக்கூடும். இன்று முதல் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் கடற்பகுதிகள் கொந்தளிப்பான நிலையில் காணப்படும் என்பதனால் மீனவர்கள் கடலுக்குச் செல்வதில் அவதானமாக இருப்பது அவசியம் - என்றுள்ளது. (அ-ம-66)

## சிறுவனொருவன்...

சடலமாக மீட்கப்பட்டுள்ளான்.

யாழ்ப்பாணத்தில் இருந்து வற்றாப்பளையில் உள்ள உறவினர் வீட்டுக்கு வருகைதந்த குறித்த சிறுவன் நேற்றுமுன்தினம் காணாமல் போயிருந்த நிலையில் உறவினர்களால் தேடப்பட்டு வந்துள்ளான். இந்த நிலையிலேயே நேற்றையதினம் அவன் நீர்நிலை ஒன்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளான். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (அ-ம-28-113-26)


## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
19 . 07 . 1947



சிவன் அடியில்
05 . 03 . 2019

அமரர்
**பொன்னையா கந்தசாமி**

(யாழ். பல்கலைக்கழகத்தின் ஓய்வுநிலை பதில் பதிவாளர், யாழ் மருத்துவ பீடத்தின் ஓய்வு நிலை சிரேஷ்ட பதிவாளர், கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோயில், கைதடி இனுங்கித் தோட்டம் கந்தசுவாமி கோயில், கைதடி மாதாஜி லிங்கேஸ்வரர் கோயில் என்பவற்றின் சபை உறுப்பினர், கைதடி கிழக்கு சனசமூக நிலையத்தின் முன்னாள் செயலாளர், அதன் முன்பள்ளியின் ஆலோசகர்)

அன்பினிலே மிகுந்தவராய் பண்பினிலே சிறந்தவராய்
மண்ணிலே உதித்து அமைவுற்ற வாழ்வினில்
நறுமணம் பரப்பி இல்லத்தில் விருட்சமாய் பாசநிழல்
தந்தையாய்
உறவுகள் பேணிடும் கருணை வடிவமாய் உரிமையாய்
உணர்வை அன்பாய் பகிர்ந்தே
விண்ணக வாழ்வை நாடியே சென்றீர்கள்
ஆறு ஆண்டுகள் பறந்தோடிச் சென்றிருந்தாலும்
என்றென்றும் உங்கள் பாதம் போற்றியே
வாழ்ந்திடுவோம்.

(cs.49001) (N-1)

"புஸ்ப பவனம்"
கைதடி கிழக்கு,
கைதடி.

மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.


## மான்...

தனித்துப் போட்டியிடவுள்ளதாகத் தெரியவருகின்றது.

இது தொடர்பான அறிவிப்பு தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான க.வி.விக்னேஸ்வரனால் இன்று வெளியிடப்படவுள்ளதாக கட்சி வட்டாரங்களில்இருந்துஅறிய முடிகின்றது. (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லிணக்க...

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 58ஆவது கூட்டத்தொடர் கடந்த திங்கட்கிழமை ஜெனிவாவில் ஆரம்பமானது. அந்தக் கூட்டத்தொடரில் நேற்று உரையாற்றும்போது வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் மேலும் தெரிவித்ததாவது:-

எமது நாட்டில் கடந்த ஆண்டு நடைபெற்றுமுடிந்த தேர்தல்களின் ஊடாக அரசியல், பொருளாதார மற்றும் சமூக மறுசீரமைப்பை ஏற்படுத்தும் நோக்கில் நாட்டின் சகல பாகங்களையும் சேர்ந்த மக்கள் பெரும்பான்மை வாக்குகள் ஊடாக எம்மைத் தெரிவுசெய்தனர்.

அதனையடுத்து இலங்கை வரலாற்றிலேயே எம்மால் கட்டமைக்கப்பட்ட நாடாளுமன்றமே மலையகத்தைச் சேர்ந்த இருவர் உள்ளடங்கலாக அதிகளவு பெண் பிரதிநிதிகளையும், மாற்றுத்திறனாளி ஒருவரையும் உள்ளடக்கிய சகல தரப்பினருக்குமான பிரதிநிதித்துவத்துடன்கூடிய நாடாளுமன்றமாகத் திகழ்கிறது.

தற்போது நாட்டின் பொருளாதாரம் உறுதியடைந்துள்ளதுடன், அதனை சகலருக்குமான சமபங்கீட்டை உறுதிப்படுத்தக்கூடிய பொருளாதாரமாக நிலைமாற்றமடையச் செய்வதை நோக்கி நாம் பயணிக்கிறோம். அதேபோன்று எமது அரசாங்கம் சமர்ப்பித்துள்ள 2025ஆம் ஆண்டுக்கான வரவு, செலவுத்திட்டத்தில் சமூகப்பாதுகாப்புச் செயற்றிட்டங்களுக்கு அதிகளவான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதன் ஊடாக நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் மக்களுக்கான நிவாரணத்தை வழங்கவுள்ளோம்.

அதுமாத்திரமன்றி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மீள்குடியேற்றம், வீடமைப்பு மற்றும் இழப்பீடு வழங்கல் ஆகியவற்றுக்கு அவசியமான நிதியொதுக்கீடும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதேவேளை நாம் புதிதாக அறிமுகப்படுத்தியுள்ள 'க்ளீன் சிறிலங்கா' செயற்றிட்டத்தின் ஊடாக நேர்மைத்தன்மை வாய்ந்ததும், பொறுப்புக்கூறத்தக்கதுமானஆட்சிநிர்வாகமுறைமையொன்றை நாட்டில் கட்டியெழுப்புவதற்கு உத்தேசித்துள்ளோம். அடுத்ததாக தேசிய ஒற்றுமை, நல்லிணக்கம் ஆகியவற்றை மேம்படுத்துவதை இலக்காகக்கொண்டு எமது அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயலாற்றுவதற்கு உறுதிபூண்டிருக்கிறது.

அதன்பிரகாரம் காணாமல்போனோர் பற்றிய அலுவலகம், இழப்பீட்டுக்கான அலுவலகம், தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகம் உள்ளிட்ட உள்ளகப் பொறிமுறைகள் மேலும் வலுப்படுத்தப்படுவதுடன், அவை சுயாதீனமானதும், நம்பகத்தன்மைவாய்ந்த முறைமையிலும் இயங்குவது உறுதி செய்யப்படும்.

அதேபோன்று சகல தரப்பினரதும் நம்பிக்கையை வென்றெடுக்கக்கூடிய வகையில் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பான கலந்துரையாடல்கள் சம்பந்தப்பட்ட சகல தரப்பினரையும்உள்ளடக்கிமுன்னெடுக்கப்படும். இலங்கையில் இடம்பெற்ற வன்முறைகள் தொடர்பில் விசாரிப்பதற்கான ஆணை அந்தக் கட்டமைப்புக்கு வழங்கப்படும். இவ்வாறு நாட்டின் அரசியலமைப்புக்கு அமைவாக உருவாக்கப்படும் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு சுயாதீனமாகவும், நம்பகமான முறையிலும் இயங்கும்.

மேலும் எமது நாடு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை உள்ளடங்கலாக ஐக்கிய நாடுகள் அந்தக் குழுக்களால் மேற்கொள்ளப்படும் கூட்டங்கள் மற்றும் மீளாய்வுகளில் முழுமையான ஒத்துழைப்பை வழங்கிப் பங்கேற்கிறது. நாட்டின்தேசிய சட்டதிட்டங்களுக்கு அமைவாக இந்த ஒத்துழைப்பைத் தொடர்ந்து வழங்குவதற்கு நாம் தயாராக இருக்கிறோம் - என்றார். (அ-ம)

## ஜனாதிபதியின்...

போதே, ஜனாதிபதியின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று அமைச்சர் ஆனந்த விஜேபால கூறியுள்ளார்.

மிகப்பெரும் பாதுகாப்பு ஏற்பாடுகளை ஜனாதிபதி எதிர்பார்க்கவில்லை. மக்களுடன் சாதாரணமாக வாழும் தலைவர் தான் அவர். ஜனாதிபதிக்கு மக்களின் பாதுகாப்பும் உள்ளது. ஆதலால், அவரின் பாதுகாப்புத் தொடர்பில் நாங்கள் அச்சமடையவில்லை என்றும் அமைச்சர் ஆனந்த விஜேபால மேலும் தெரிவித்துள்ளார். (அ-ம-44)

## ஈ.பி.டி.பி.யும்...

தொடக்கம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வரை இந்தக் கூட்டணியில் இணையமுடியும் என்று ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் பேச்சாளர் சுரேஸ் பிறேமச்சந்திரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் நேற்று மேலும் தெரிவித்ததாவது:-

உள்ளூராட்சித் தேர்தலை வடக்கு, கிழக்கில் எவ்வாறு எதிர்கொள்வது என்பது தொடர்பில் நாங்கள் தற்போது கவனம் செலுத்தியுள்ளதுடன், இதற்காகப் பரந்துபட்ட பேச்சுவார்த்தைகளையும் மேற்கொண்டுவருகின்றோம். பல கட்சிகள் கூட்டணி அமைத்துப் போட்டியிடுவதற்குத் தமது விருப்பத்தை வெளியிட்டுள்ளன.

இந்தக் கூட்டணி வெறும் தேர்தல் கூட்டணியாக அல்லாமல், தமிழ் மக்களின் விருப்பத்தை வெளிப்படுத்தும் கூட்டணியாகவே அமையவேண்டும். இன்று (நேற்று) இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகள் மற்றும் சமத்துவக் கட்சி, சனநாயக தமிழரசு கூட்டமைப்பு, தமிழ் மக்கள் கூட்டணி என்பன கலந்துகொண்டன - என்றார். (அ-ம-125-20-27)

## புலிகளின்...

அமைப்பின் தலைவரான இத்தேகந்தே சத்தாதிஸ்ஸ தேரர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாமல் ராஜபக்ச கிராமங்களுக்குச் சென்றால் பின்னர் குழிக்குள்தான் செல்ல வேண்டிவரும் என்று பிரதி அமைச்சரொருவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். இது பாரதூரமான அறிவிப்பு. இது தொடர்பில் விசாரணை நடத்தப்பட்டு, உரிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

அதேபோல நாமல் ராஜபக்சவின் பாதுகாப்புத் தொடர்பில் அரசாங்கம் பொறுப்புக்கூறவேண்டும் என்பதுடன், அவருக்குரிய பாதுகாப்பை உறுதிப்படுத்தவேண்டும். நாமலின் பாதுகாப்பு மட்டுமல்ல நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பும் பலப்படுத்தப்படவேண்டும்.

ஜனாதிபதிக்குப் பாதுகாப்பு அச்சுறுத்தல் உள்ளதென புலனாய்வுத் தகவல்களை மேற்கோள்காட்டி தகவல்கள் வெளிவந்துள்ளன. ஜனாதிபதிக்கே அச்சுறுத்தலெனில் சாதாரண மக்களின் நிலை? எனவே, தேசியப் பாதுகாப்புத் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்படவேண்டும். புலிகள்காலத்தில்கூட நீதிமன்றத்துக்குள் துப்பாக்கிச்சூடு நடந்தில்லை. தற்போது அவ்வாறு நடந்துள்ளது. அதனால்தான் தேசியப்பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்எனக் கூறுகின்றோம் - என்றார். (அ-ம-44)

## செல்வம்...

பட்ட நிலைப்பாடு என்று ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணின் ஊடகப் பேச்சாளர் சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் நேற்று மேலும் தெரிவித்ததாவது:-

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் வரவு - செலவுத்திட்டத்துக்கு நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் வழங்கிய ஆதரவு கூட்டணியின் தீர்மானம் அல்ல. அது செல்வம் எம்.பி.யின் தனிப்பட்ட முடிவு.

பட்ஜெட்டின் இரண்டாவது வாசிப்பின் மீதான வாக்கெடுப்பின்போது மூன்று வகையான தீர்மானங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதன்படி, பட்ஜெட்டுக்கு ஆதரவு வழங்கப்பட்டுள்ளது, பட்ஜெட்டுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது, வாக்கெடுப்புப் புறக்கணிக்கப்பட்டுள்ளது. ஆக, கூட்டான முடிவுகள் என்று எவையும் இல்லை.

பாதீட்டின் இறுதி வாக்கெடுப்புக்கு முன்னர் நாங்கள் கலந்தாலோசித்து எமது கூட்டணியின் முடிவை அறிவிப்போம் - என்றார். (அ-ம-125)

## வெடுக்குநாறி...

முன்னெடுக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து அடியவர்களுக்கு அன்னதானமும் வழங்கப்பட்டிருந்தது.

இம்முறை ஆலயத்தில் மாலை 6 மணி வரை மாத்திரமே பூஜைகளை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அந்த வகையில் மாலை 6 மணிவரை ஆலயத்தில் விசேடவழிபாடுகளை மேற்கொண்ட பொதுமக்கள் அதன்பின்னர் தமது வீடுகளுக்குத் திரும்பினார்கள்.

இதேவேளை நேற்றுக் காலைமுதல் ஆலயப் பகுதியில் நெடுங்கேணிப் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். இருப்பினும் பொதுமக்களின் வழிபாடுகளுக்கு எந்தத் தடைகளும் பொலிஸாரால் ஏற்படுத்தப்படவில்லை.

கடந்த வருடம் சிவராத்திரி தினமன்று மாலை 6 மணிக்கு பின்னர் சிவராத்திரி பூஜைகளை முன்னெடுக்க முற்பட்ட 8 பேர் நெடுங்கேணிப் பொலிஸாரால் அடாவடியான முறையில் கைதுசெய்யப்பட்டனர். அந்தச் செயற்பாடு மதப்பதற்றம் ஒன்றை உருவாக்கியிருந்ததுடன், பொலிஸாரின் செயற்பாடுகளுக்கு எதிராக பல்வேறு போராட்டங்களும் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-110)

## நிர்வாகத்துக்கு...

மேற்கொள்வதற்குத் தீர்மானித்துள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் அங்கு நோயாளர்கள் பெரும் மருத்துவ நெருக்கடியை எதிர்கொள்ளும் அபாயநிலை ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர் வெளியிட்டுள்ள அறிக்கையில் உள்ளதாவது:-

நோயாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்யத் தவறியமை மற்றும் யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனையின் நிர்வாகத்தைத் தக்கவைப்பதற்காக மருத்துவமனை ஊழியர்களிடையே தொடர்ந்தும் சர்ச்சைகளை உருவாக்கும் முயற்சிகளைத் தொடர்ச்சியாக மருத்துவமனைப் பணிப்பாளர் மேற்கொண்டு வருகின்றமை ஆகிய செயற்பாடுகளை எதிர்த்தும் கண்டித்தும் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட நாம் தீர்மானித்துள்ளோம்.

அத்துடன் எமது தொழிற்சங்க நடவடிக்கையின் முக்கியமான விடயங்களாக பின்வரும் விடயங்கள் அமைந்துள்ளன.

**இதன்படி:**

1. நோயாளர் அவசர சேவைகளுக்கான பிரிவுகளுக்கு ஆளணிப் பற்றாக்குறையாகவும் அதேநேரம், சாதாரணபிரிவுகளுக்கு அதிகமான ஆளணியும் பொருத்தப்பாடற்ற விதத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டு இருப்பதனால் நோயாளரின் உயிருக்கு உத்தரவாதம் இல்லாமல் உள்ளது.
2. யாழ் போதனா மருத்துவமனை நிர்வாகத்தின் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்காக வித்து, அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் ஓர் ஆபத்தான பணியாளரைப் பொறுப்பிலிருத்தி அர்ப்பணிப்பான பணியாளரை இடம்மாற்றியுள்ளமை நோயாளிகளின் உயிராபத்துக்கு ஏதுவான பாதகமான நிலையை உருவாக்கியுள்ளது.
3. சில ஊழியர்களின் பொறுப்புணர்ச்சி அற்ற நடவடிக்கைகள் தொடர்பாக மருத்துவ நிபுணர்கள் சுட்டிக்காட்டியபோதும் அவர்களைத் திருத்துவதற்கு இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.
4. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் மருத்துவ நிபுணர்களால் தகவல்கள் கோரப்படும்போது தவறான தகவல்களை வழங்குவதுடன் தகவல்களை வழங்குவதில் தாமதம் செலுத்துதல்.
5. மருத்துவமனையில் ஆபத்தான நிலையில் உள்ள அனைத்து நோயாளிகளினதும் பாதுகாப்பை உறுதிசெய்யும் வரை தொழிற்சங்க நடவடிக்கையாக, அதிதீவிர சிகிச்சை தவிர்ந்த சாதாரண பணிகளையும் இடை நிறுத்த முடிவுசெய்துள்ளோம்.

இது நோயாளரின் நலன்கருதி எடுக்கப்பட்டுள்ள முடிவு என்பதனால் நீண்டகால நோக்கிலான சரியான முடிவுகள் எட்டப்படும்வரை தொழிற்சங்க நடவடிக்கையைத் தொடர வாய்ப்புள்ளது. இதனால் யாழ். போதனா மருத்துவமனையின் அவசர சிகிச்சைகள் தவிர்ந்த ஏனைய சிகிச்சைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்படும் என்பதனை மனவருத்தத்துடன் நாம் தெரிவித்துக்கொள்கின்றோம் - என்றுள்ளது. (அ-ம-26)

## அத்துமீறிய...

யாழ்ப்பாணத்தில் இன்று பெரும் ஆர்ப்பாட்டம் இடம்பெறவுள்ளது.

தீவகக் கடற்றொழிலாளர் அமைப்புகள் இணைந்து முன்னெடுக்கும் இந்த ஆர்ப்பாட்டம், யாழ்ப்பாணம் பண்ணைப் பகுதியில் அமைந்துள்ள கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்துக்கு முன்பாக காலை 8 மணியளவில் ஆரம்பித்து யாழ்ப்பாணம் சுண்டுக்குளியிலுள்ள வடமாகாண ஆளுநர் செயலகம் வரை முன்னெடுக்கப்படவுள்ளது. (அ-ம-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாடியிலிருந்து தவறிவீழ்ந்து நபரொருவர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், பெப். 27

மின்னிணைப்புச் செய்துகொண்டிருந்தபோது மாடியில் இருந்து தவறி வீழ்ந்த நபரொருவர் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணைப் பகுதியைச் சேர்ந்த தனபாலசிங்கம் நிதுசன் என்ற நபரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் இந்த அசம்பாவிதம் இடம்பெற்றுள்ளது. இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிரேமகுமார் மேற்கொண்டார். (ம26)




# 'ஷெல்' நிறுவனம் இலங்கையில் தடம்

யாழ்ப்பாணம், பெப். 27

அமெரிக்க நிறுவனமான ஆர். எம். பார்க்ஸ், ஷெல் வர்த்தக நாமத்தின் கீழ் இலங்கையில் முதலாவது எரிபொருள் நிலையத்தை அம்பத்தலைப் பகுதியில் நேற்று திறந்து வைத்துள்ளது.

இலங்கைக்கானஅமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் பங்கேற்று இதனைத் திறந்துவைத்தார்.

நாட்டில் எரிபொருள் சந்தையில் நுழையும் நான்காவது நிறுவனம் இதுவாகும். (ச-இ)



# ஆஸி. தூதுவருடன் சஜித் சந்திப்பு

இலங்கைக்கான அவுஸ்திரேலியத் தூதுவர் போல் ஸ்டீபன்ஸ் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோருக்கு இடையிலான விசேட சந்திப்பு நேற்று நாடாளுமன்றத்திலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

சந்திப்பில் நாட்டில் நிலவும் பல்வேறு சமூக, பொருளாதார மற்றும் அரசியல் விடயங்கள் தொடர்பில் நீண்டநேரம் கருத்துப் பரிமாற்றம் நடைபெற்றது.

இதன்போது தற்போதைய அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள வரவு - செலவுத் திட்டம் குறித்தும் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல் குறித்தும் எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார். (ச-இ)


## வேலைக்கு ஆள் தேவை

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு அண்மையாகவுள்ள பாடசாலை உபகரணப் பொருட்கள் விற்பனை நிலையத்திற்கு அடிப்படை கணினி அறிவுள்ள பெண் ஊழியர்கள் தேவை.
(Photo Copy, Printing சம்பந்தமான முன் அனுபவம் விரும்பத்தக்கது.)

தொடர்பு: 074 164 8953

## வேலையாட்கள் தேவை

யாழ் நகரில் இயங்கும் பிரபல தனியார் கல்வி நிறுவனத்திற்கு ஆண், பெண் மேற்பார்வையாளர்கள் தேவை.
28,02.2025 வெள்ளிக்கிழமை 10am மணியளவில் நேர்முகத்தேர்வு இடம்பெறும்.
மேலதிக விபரங்களுக்கு

077 244 9834
(8.00am - 4.00pm)

(Cr4447(61N-1)

## உடனடி வேலை வாய்ப்புகள்

யாழ்நகரில் உள்ள புடவை விற்பனை நிலையத்திற்கு
**City Tex - Nallur**
அனுபவம் உள்ள, பழகவிரும்பும் ஆண், பெண் விற்பனையாளர் உடன் தேவை.
அருகில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
சம்பளம் - 35000 + Bonus, வயது - 18 - 25 வரை.
வேலை நேரம் காலை 9.00 - இரவு 8.30 வரை.
மதிய உணவு, தேநீர் வழங்கப்படும்.

021 221 6185, 077 293 5537

(CS29838) J-1

## பணியாளர் தேவை

யாழ்நகரில் அமைந்துள்ள நிறுவனம் ஒன்றிற்கு அலுவலக பணியாளர்கள் தேவை.
18 - 30 வயது உடைய பெண்கள் விரும்பத்தக்கது.
யாழ்நகரில் இருந்து 6 km உட்பட்டவர்கள் மட்டும் தொடர்புகொள்ளவும்.
357, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்
076 185 2241

(cs.29841) (N-1)


## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 19 . 07 . 1942 | 25 . 02 . 2025 |

### வேலுப்பிள்ளை தம்பிராசா

இத்தாவில் பளையைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை தம்பிராசா அவர்கள் நேற்று (25.02.2025) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு புதல்வனும் கனகம்மாவின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான பொன்னையா-சிதம்பரம் தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான செல்லம்மா, கனகம்மா, தங்கம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் தேவி (ஜேர்மன்), கலியுகவரதன் (பிரான்ஸ்), கேதீஸ்வரி, விஜயலட்சுமி (பிரான்ஸ்), ஜெயலட்சுமி (ஜேர்மன்), குகதாசன் (பிரான்ஸ்), வசீகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் இரத்தினராசா (ஜேர்மன்), வளர்மதி (பிரான்ஸ்), அருந்தவலிங்கம், சிவபாதம் (பிரான்ஸ்), இரவீந்திரன் (ஜேர்மன்), அகிலா (பிரான்ஸ்), சிவறஞ்சனி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் பிரகாஷ், பிரசா, அனுஷன், அகல்யா, தஜீபன், கோபினி, அபி, அபிஷா, அபிரா, பிரவீன், நிறோஜன், இனியா, அக்ஷயா, கபிசயா, அர்சன், விசாகன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.02.2025) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் இல 465/16A பருத்தித்துறை வீதி, நல்லூரில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அரசர்கேணி, புன்னையடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

இல 465/16A
பருத்தித்துறை வீதி
நல்லூர்.

தகவல்: குடும்பத்தினர்.
077 430 4991, 077 608 8338
076 898 0712

(CS 29832) V-1

## கண்ணீர் அஞ்சலி



யா/ யூனியன் கல்லூரி 96A/L பழைய மாணவன்
திரு. சசிகரன் சந்திரசேகரம்
அவர்களின் பாசமிகு தந்தையார்

### திரு. செல்லத்துரை சந்திரசேகரம்

அவர்கள் கடந்த 24-02-2025 திங்கட்கிழமை இறைபதம் அடைந்த செய்தி அறிந்து நாங்கள் மிகவும் வேதனை அடைகின்றோம்.

அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எங்களின் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவுத் துயர் பகிரும்
யா/யூனியன் கல்லூரி
நண்பர்கள் குழு (96 உயர்தரம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27.02.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.